# உதயன்

விலை ரூபா 7.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 18 வியாழக்கிழமை (01-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:156


# யுத்தத்துக்கு எதிரான கோஷங்களுடன் யாழ்.நகரில் இன்று கூட்டு மேதின விழா

## நல்லூரிலிருந்து ஊர்திப் பேரணி; மத்திய கல்லூரி மைதானத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே1

உலகத் தொழிலாளர் தினமான மேதினம் இன்று குடாநாட்டில் பெரும் எழுச்சியுடன் கொண்டாடப்படவுள்ளது. போருக்கு எதிரான மக்கள் எழுச்சியாக மேதினம் இம்முறை அனுஷ்டிக்கப்படுறது.

பொது அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் இணைந்து இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

மேதினத்தை ஒட்டிய பிரதான நிகழ்வு யாழ்மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

நல்லூரில் தியாகி திலீபனின் நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்திலிருந்து பிற்பகல் 2 மணியளவில் ஊர்திப்பேரணி ஒன்று ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி, மணிக்கூட்டு வீதி ஆகியவற்றின் ஊடாக யாழ்மத்திய கல்லூரி மைதானத்தைச் சென்றடையும். முன்னதாக வலிகாமத்தின் ஏனைய இடங்களில் இருந்தும் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பகுதிகளில் இருந்தும் பொது அமைப்புகள் மற்றும் தொழிற் சங்கங்களின் ஏற்பாட்டில் ஊர்திப்பவனிகள் புறப்படும். அவை பிற்பகல் 1.00 மணியளவில் நல்லூரை வந்தடைந்ததும் பிரதான ஊர்திப்பவனி ஆரம்பமாகும்.

வடமராட்சியில் நவிண்டில் மூத்த விநாயகர் ஆலயத்தடியில் இருந்து ஊர்திப் பேரணி புறப்படும்.

இன்றைய மேதின நிகழ்வுகள் அரசியற் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளின் ஒருங்கிணைந்த ஏற்பாட்டின்கீழ் முன்னெடுக்கப்படுகின்றன. தமிழ்க் கூட்டமைப்புக் கட்சிகளும் ஏனைய அரசியல் கட்சிகளும், பொது அமைப்புகள், வெகுஜன ஒன்றியங்கள், கூட்டுறவு அமைப்புகள் என்பனவும் இணைந்து கூட்டு மேதின நிகழ்வை இன்று நடத்துகின்றன.

இன்றைய மேதினப் பேரணியிலும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு மூன்று கடிதங்களை அனுப்பியதோடு

# அரசு - புலிகள் உறவு சீரடைந்தது என்கிறார் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

## ஜப்பான் உதவுநர் மாநாட்டில் புலிகள் கலந்துகொள்வர் என்று பூரண நம்பிக்கை

கொழும்பு,மே1

**கடந்த 72 மணிநேரத்தில் அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மூன்று கடிதங்களை அனுப்பியுள்ளது. அவற்றையடுத்து அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான உறவு மீண்டும் சீரடைந்துவிட்டது. இதனால் ஜப்பானில் ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் புலிகளும் கலந்துகொள்வார்கள்.**

**- இவ்வாறு அரசியல் விவகார அமைச்சரும், சமாதானப் பேச்சுக்களில் அரச குழுவிற்குத் தலைமை வகித்து வருபவருமான அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று நம்பிக்கை தெரிவித்தார்.**

இதேவேளை, கடந்த 20 வருட யுத்தத்தில் படுமோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் உடனடி அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான நிதிக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் அரசும் புலிகளும் இணைந்தே கோரிக்கை விடவேண்டும். எனவே, புலிகள் கட்டாயமாக அம்மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும் என அரசாங்கம் வலியுறுத்துகின்றது எனவும் அமைச்சர் பீரிஸ் கூறினார்.

நேற்றுக்காலை அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவற்றைத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே தூதுவர் நேற்று தமிழ்ச்செல்வனுடன் பேச்சு

யாழ்ப்பாணம்,மே1

நோர்வே தூதர் ஹான்ஸ் பிரட்ரீஸன், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்று நண்பகல் கிளிநொச்சியிலுள்ள அரசியல்துறை நடுவப்பணியகத்தில் வைத்துச் சந்தித்தார். நண்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை சுமார் 2 மணி நேரம் இடம்பெற்ற இச்சந்திப்பில் முன்னாள் நோர்வேத் தூதர் ஜோன் வெஸ்பேர்க்கும் கலந்துகொண்டார்.

நேற்றைய சந்திப்பில் சமாதானப் பேச்சுக்களை விடுதலைப் புலிகள் தற்காலிகமாக இடைநிறுத்தியதை அடுத்து உருவாகியிருக்கும் நெருக்கடி நிலை குறித்து ஆராயப்பட்டது.

சந்திப்பின் பின்னர் நோர்வே தூதர் ஹான்ஸ் பிரட்ரீஸன் செய்தியாளர்களிடம் கூறுகையில், "இன்றைய கலந்துரையாடல் மிகவும் ஆக்கபூர்வமானதாக அமைந்தது" எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை -

உலக வங்கியின் பணிப்பாளர் பீற்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பாலசிங்கத்தின் இலங்கைக்கான வருகை சமாதான முயற்சிகளில் புதிய திருப்பம்

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு,மே1

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இலங்கைக்கு வருகைதந்தால் அது பெரும் நன்மை அளிப்பதாகவே அமையும்; சமாதானப் பேச்சுக்கள் தொடர்வதற்கு ஒரு திருப்புமுனையாகவும் அமையும். இப்படி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறினார்.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே அவர் இப்படிக் கூறினார்.

பேச்சுக்களை இடைநிறுத்திப் பிரதமருக்குக் கடிதம் எழுதிய புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் இலங்கைக்கு வர இருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன. இது பற்றி என்ன கூறுகின்றீர்கள்? என்று செய்தியாளர் கேட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அன்ரன் பாலசிங்கம் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

அதேபோன்று அரசின் நிலைப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மனநலம் குன்றிய யுவதியை கடத்திச் சென்று வல்லுறவு

### சுன்னாகத்தில் கொடூரச் சம்பவம்

யாழ்ப்பாணம்,மே1

மனநலம் குன்றிய இளம் பெண் ஒருவரை கடத்திச் சென்று பாலியல் வல்லுறவு புரிந்துவிட்டு அவரிடமிருந்த தங்க நகைகளை அபகரித்த இருவரை விடுதலைப் புலிகள் தடுத்து வைத்திருக்கின்றனர்.

கடந்த வியாழனன்று சுன்னாகம் பகுதியில் வைத்து மேற்படி இளம் பெண் கொடூரமான முறையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார் என்று கூறப்படுகிறது.

இக்கொடூரத்தைப் புரிந்த இருவரையும் மடக்கிப் பிடித்த பொதுமக்கள் அவர்களை நையப்புடைத்துவிட்டு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்திருக்கின்றனர்.

கடை ஒன்றில் தொழில் புரிபவர்களான சுன்னாகம் ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நாகராசா(வயது41), இணுவில் கோயில் சந்தியைச் சேர்ந்த பூ.பழனிதரன் (வயது 26) ஆகிய இருவருமே பொதுமக்களிடம் சிக்கியவர்களாவர்.

இந்தச் சம்பவம் குறித்து பாதிக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்கள் திரும்பவில்லை

தென்மராட்சி,மே1

வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு கடும் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டதால் மீன்பிடிக்கச் சென்ற நான்கு படகுகள் நேற்றுக்காலை 10 மணிவரை கரைதிரும்பவில்லை என அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

இரவு வீசிய கடும் காற்றினால் பல படகுகள் நீரில் மூழ்கின என்றும் - அவற்றில் இருந்த மீனவர்கள் ஒரு

(14ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டைக்கு படைத்தளத்தை இடம்மாற்றுவதா? புலிகளின் பிரதிபலிப்பு இரண்டொரு நாள்களில்!

கிளிநொச்சி,மே1

யாழ்.நகரின் மத்தியில் சுபாஸ் ஹோட்டல், ஞானம்ஸ் ஹோட்டல் மற்றும் அவற்றின் சுற்றாடலில் உள்ள 512ஆவது பிரிகேட் படைத்தளத்தை யாழ்.கோட்டைப் பகுதிக்கு இடம்மாற்றும் அரசின் திட்டம் குறித்து விடுதலைப் புலிகளின் பிரதிபலிப்பு இரண்டொரு நாள்களில் வெளியாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் படைத் தளத்தை யாழ்.கோட்டையையும் உள்ளடக்கி அதன் அருகில் உள்ள யாழ்.மாநகர சபை, யாழ். வாடிவீடு ஆகியவற்றுக்கான காணிகளில் அமைப்பதற்கு ஏப்ரல் முற்பகுதியில் முயற்சிகள் எடுக்கப்பட்டன. அப்போது விடுதலைப் புலிகள் இயக்கமும் ஏனைய பல தமிழ்க்கட்சிகளும் பெரும்பாலான பொது அமைப்புக்களும் ஒன்றுதிரண்டு அதனை எதிர்த்தன.

இந்நிலையில், யாழ்.கோட்டை பொலீஸ் நிலையத்துக்குரிய காணி மற்றும் யாழ்.கோட்டைக்கு மேற்குப் புறமாக உள்ள காணிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசத்திற்கு படைத்தளத்தை மாற்றியமைக்க ஒரு தலைப்பட்சமாக அரசு முடிவு செய்தது.

இந்த முடிவு குறித்து கடந்த ஞாயிறன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், விடுதலைப் புலிகளின் அரசி

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### யாழ். நகரில் பல்வேறு இடங்களிலும்

# சைக்கிள்களில் சமாந்தரமாகச் சென்ற 85பேர் பொலீஸாரால் கைதாகி விடுதலை

யாழ்ப்பாணம்,மே1

சைக்கிளில் சமாந்தரமாகப் பயணித்த வேளை பொலீஸாரால் கைது செய்யப்பட்ட 85 பேர் நேற்று யாழ்நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து, இவர்களை எச்சரிக்கை செய்து விடுவித்த நீதிவான், இ.த.விக்னராஜா தலா 200 ரூபா தண்டப்பணமாகச் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

அத்துடன், தொடர்ந்தும் இதே தவறைச் செய்தால் தண்டப்பணத்தின் தொகை மேலும் அதிகரிக்கப்படும் எனவும் நீதிவான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த 85பேரில் இளைஞர்கள், யுவதிகள், குடும்பஸ்தர்கள் மற்றும் கணவன் - மனைவி ஆகியோரும் அடங்குவர். இதனால் நேற்று நீதிமன்ற வளாகத்தில் சனக்கூட்டம் அதிகமாகக் காணப்பட்டது.

இதேவேளை -

தமது உறவுகள் கைதுசெய்யப்பட்டதை அறிந்ததும் ஏராளமான பொதுமக்களும் நீதிமன்றத்துக்கு வந்திருந்தனர்.

யாழ்.மாநகர சபைப் பகுதியின் பல இடங்களிலும் வைத்து நேற்றுக் காலைமுதல் இவர்கள் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

சைக்கிள்களைப் பொலீஸார் தம்முடன் எடுத்துச்சென்று யாழ்.பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்திருந்தனர்.

நதிமன்றில் தண்டப்பணம் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்த பின்னரே இவர்களின் சைக்கிள்கள் பொலீஸாரால் மீண்டும் உரிமையாளர்களிடம் வழங்கப்பட்டன.

(எ-10-5-30)

# மயூரணி கொலைச் சந்தேகநபரான பாலபிரசன்னா திருமலையில் பெண்ணின் கைகளை வெட்டியவர்!

## மதுரைச் சம்பவம் பற்றி புதிய தகவல்கள்

மதுரையில் திருமலை மாணவி மயூரணி படுகொலைசெய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேக நபராகக் கைதாகியுள்ள மாணவன் பாலபிரசன்னா 2001ஆம் ஆண்டு திருமலையில் இளம்பெண் ஒருவரினதும், அவரது மாமியாரினதும் கைகளை வெட்டிய குற்றத்தின்பேரில் பொலீஸாரால் தேடப்பட்டுவருபவர் ஆவார்.

2001ஆம் ஆண்டு ஒகஸ்ட் 29 ஆம் திகதி திருமலை திருஞானசம்பந்தர் வீதியில் முத்துக்குமாரசுவாமி ஆலயத்துக்கு அருகில் உள்ள வீட்டிலேயே இந்தக் கத்திவெட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

பிரஸ்தாப பெண்ணைக் காதலித்த பாலபிரசன்னா, அந்தப்பெண் தனது முறைமாப்பிள்ளையைத் திருமணம் செய்துகொள்ளப்போவதாகக் கூறிய போது, தன்னைத் திருமணம் செய்யும்படி வற்புறுத்தினார். ஆனால், அந்தப் பெண்ணுக்கும் அவரது முறை மாப்பிள்ளைக்கும் பதிவுத்திருமணம் நடைபெற்றது. அந்த ஆண்டு செப்ரெம்பர் 6 ஆம் திகதி திருமணநாள் நிச்சயிக்கப்பட்டிருந்த வேளையிலேயே இந்தக் கத்திவெட்டு நடைபெற்றது.

அதிகாலை 5 மணியளவில் வீட்டுக்குள் புகுந்து பெண்ணின் கைகளை வெட்டினார் பாலபிரசன்னா. பெண்ணின் ஒரு கை மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்டது. மற்றைய கை வெட்டுண்டு தொங்கியது. இதைத்தடுக்க வந்த பெண்ணின் மாமியாரின் மூன்று விரல்கள் துண்டிக்கப்பட்டன. சம்பவத்தை அடுத்து பாலபிரசன்னா தப்பிவிட்டார். பொலீஸ் வலை விரித்துத் தேடியும் அவன் பிடிபடவில்லை.

கடற்படை உதவியுடன் விசேட ஹெலிகொப்டர் மூலம் பிரஸ்தாப பெண் கொழும்புக்கு அனுப்பப்பட்டு அவரது கைகளைப் பொருத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சில காலத்தின் பின் கைகள் பொருத்தப்பட்டன.

சம்பவம் நடந்த அடுத்த நாள் திருகோணமலை உவர்மலைப் பகுதியில் பாலபிரசன்னா பதுங்கியிருக்கிறான் என்ற தகவல் கிடைத்ததையடுத்து, அப்பகுதியைப் பொலீஸார் சுற்றிவளைத்து முற்றுகையிட்டபோதும், அதை முன்கூட்டியே அறிந்த பாலபிரசன்னா அங்கிருந்தும் தப்பிவிட்டான் என்று கூறப்பட்டது.

அதன்பின் தேடப்பட்டுவந்த பாலபிரசன்னா எப்படியோ தப்பி இந்தியா சென்றார். (எ)







இலங்கைக்கான நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஈசன், முன்னாள் தூதர் ஜோன் வெஸ்பேர்க் ஆகியோரும் உலக வங்கியின் பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட் ஆகியோரும் நேற்று கிளிநொச்சிக்கு சென்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.பதமிழ்ச்செல்வனைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படங்கள். *(படங்கள் : தேவா)*

# உழைக்கும் மக்களின் ஒத்துழைப்பாலேயே நாட்டைக் கட்டியெழுப்பும் முயற்சி வெல்லும்!

## பிரதமர் ரணில் நம்பிக்கை



கொழும்பு,மே1

உழைக்கும் மக்களின் பூரண ஒத்துழைப்பின் மூலமே நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சி வெற்றியளிக்கும் என்பதே எனது நம்பிக்கையாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது மேதினச் செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஒருநாட்டின் பொருளாதார அபிவிருத்தியும் மக்களின் உயர்தர வாழ்க்கைத் தரமும் நிலைத்து நிற்க அ[illegible]டின் உழைப்பே விசேடமாக து[illegible]ரியும். மக்களின் திருப்திக்கான உற்பத்திகளையும் சேவைகளையும் உயர்ந்த மட்டத்தில் வழங்கும் பொறுப்பு, கொள்கை வகுப்பவர்களுக்கும் உழைக்கும் மக்களுக்கும் உரியதாகும்.

எம்மால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் வெற்றிக்காக நாட்டின் தொழிற்துறையினரும், தொழில்நுட்பவியலாளர்களும், பயிற்சிபெற்றவர்களும் அவ்வாறே விவசாயிகளும் தொழிலாளர்களும் பெரும் அர்ப்பணிப்புடனும் பொறுப்புடனும் செயற்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

எமது நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைப்பை வழங்கும், வியர்வையைச் சிந்தும், அறிவைப் பயன்படுத்தும் அனைவருக்கும் நாட்டின் எதிர்கால சுபிட்சத்துக்காக இதனைவிட உயர்ந்த அர்ப்பணிப்பைச் செய்ய சக்தியும் தைரியமும் கிடைக்கட்டும் என பிரார்த்திக்கின்றேன்.

- இவ்வாறு செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (எ)

### வவுனியாவில் இம்முறை எழுச்சிபூர்வமாக மேதின நிகழ்வுகள்

வவுனியா,மே1

வவுனியாவில் இன்று மேதின நிகழ்வுகள் கோலாகலமாக நடைபெறவுள்ளன.

வடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புடன் வவுனியா வெகுஜன அமைப்புகள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

வவுனியாவில் ஐந்து இடங்களிலிருந்து மாலை 5மணிக்கு ஆரம்பமாகும் பேரணிகள் வவுனியா நகரசபை மைதானத்தில் ஒன்று கூடும். அங்கு பொதுக்கூட்டம் நடைபெறும்.

கண்டி வீதி ,யாழ்வீதி ஹொறவபொத்தானை வீதி,மன்னார் வீதி, பூந்தோட்ட வீதி ஆகிய இடங்களில் இருந்து பேரணிகள் ஆரம்பமாகும். (எ)

# பாட்டாளி மக்களின் உரிமைகளையும் அரசியல் தீர்வு பாதுகாக்கவேண்டும்

## மேதினச் செய்தியில் ஜனாதிபதி சந்திரிகா



கொழும்பு,மே1

அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதும் அனைவரினதும் உரிமைகள் பாதுகாக்கப்படுவதுமான அரசியல் தீர்வொன்றுக்கு இட்டுச்செல்வதாக இன்றைய சமாதான முன்னெடுப்பின் இறுதி விளைவு அமையவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது மேதினச் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தேசியளவில் நோக்கின், ஒவ்வோர் இனக் குழுமங்களையும் சேர்ந்த பாட்டாளி மக்கள் தமது சொந்த உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதில் சவாலை எதிர்நோக்கியுள்ளனர். அந்தந்த இனக் குழுமங்களின் உரிமைகள் பாதுகாக்கப்படின் மாத்திரமே தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகள் பாதுகாக்கப்படும். தற்போதைய சமாதான முன்னெடுப்புகளின் இறுதி இலக்காகப் பாட்டாளி மக்களின் சகல உரிமைகளையும் பாதுகாப்பதும் அமையவேண்டும்.

நாட்டின் இறைமை, ஐக்கியம், ஆள்புல ஒருமைப்பாடு என்பன பாதுகாக்கப்படுவதும் இன்றியமையாதனவாகும். யாதொரு காரணத்தினாலும் இந்த உரிமைகளுக்கு இரண்டகம் செய்யவோ அவை தொடர்பில் யாதொரு வகையிலும் மாறுதல்களை மேற்கொள்வதற்கோ இந்நாட்டின் பாட்டாளி மக்கள் எவ்விதத்திலும் இடமளிக்கமாட்டார்கள் என்பது எனது நம்பிக்கையாகும் - என்று அதில் உள்ளது. (எ)

# அகதிகளுக்கு வழங்குவதற்கு இருந்த மோசமான அரிசி கைப்பற்றப்பட்டது!

## வன்னி புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகள் சோதனை

வடமாகாண அகதிகளுக்கு விநியோகிப்பதற்கென களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த மனித பாவனைக்கு உதவாத ஒரு தொகை அரிசி கைப்பற்றப்பட்டுள்ளது.

வன்னி புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகள் குழு, நுரைச்சோலை, கண்டக்குழி, குறிஞ்சிப்பிட்டி ஆகிய இடங்களில் நடத்திய சோதனையில் இவ்வரிசி கண்டுபிடிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாவனைக்கு உதவாத, விலை கூடிய அரிசி அகதிகளுக்கு விநியோகிக்கப்படுவதாக வன்னி புனர்வாழ்வு அமைச்சுக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வந்தன.

இதனையடுத்து அமைச்சர் நூர்தீன் மஷூர் இச்சோதனையை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளைப் பணித்தார்.

புத்தளம் மாவட்டத்தில் வடமாகாணத்தைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரத்து 500 குடும்பங்கள் உலர் உணவுப் பொருள்களைப் பெற்று வருகின்றன. (எ)

# சமாதான சூழல் காரணமாக வெளிநாட்டு முதலீடு அதிகரிப்பு

## மேதினச் செய்தியில் தொழில் அமைச்சர்

கொழும்பு,மே1

நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலை காரணமாக வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்துள்ளன. இது வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும்.

- இவ்வாறு தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தனது மேதினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொழில் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

'ரெக்கிய பியச' என்னும் பெயரில் வேலை வாய்ப்புக்களை வழங்க இன்று 17மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 'தகுதியானவர்களுக்கு தகுதியான வேலை' எனும் தொனிப் பொருளின் கீழ் இந்த மத்திய நிலையங்கள் செயற்படுகின்றன.

கடந்த வருடத்திலும் தொழிலாளர்களுக்கு நன்மைபயக்கும் விதத்தில் பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மத்திய கிழக்கில் மாத்திரம் இருந்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு இன்று கொரியா, சிங்கப்பூர், மலேசியா, இத்தாலி போன்ற நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

'விகமன பியச' எனும் பெயரில் விசேட பிரிவு ஒன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வெளிநாட்டில் தொழில் செய்துவிட்டுத் திரும்புவோருக்கு பல நன்மைகள் ஏற்படுத்தப்படுகின்றன. வெளிநாட்டில் விபத்துக்களில் சிக்கும் தொழிலாளர்களுக்கு நஷ்டஈடுகளும் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது.

1990ஆம் ஆண்டு குவைத் யுத்தத்தில் பாதிக்கப்பட்டு இதுவரை நஷ்டஈடு பெறாத பலருக்கு கடந்த ஆண்டு நஷ்டஈடு பெற்றுக்கொடுக்கப்பட்டது.

- இவ்வாறு தொழில் அமைச்சர் தமது செய்தியில் தெரிவித்துள்ளார். (எ)

# கடைமீது தற்கொலைத் தாக்கு நால்வர் பலி! 50 பேர் படுகாயம்!!

## இஸ்ரேலிய நகரில் சம்பவம்



ஜெருசலேம்,மே1

இஸ்ரேலின் பெரிய நகரான ரெல் அவிவ்வில் உள்ள தேநீர் கடை ஒன்றினுள் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 4 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்; 50 பேர் காயமடைந்தனர்.




உள்ளூர் நேரப்படி நள்ளிரவு ஒரு மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. சனநெருக்கடி மிக்க பிரதேசத்தில் இருந்த அந்தக் கடையினுள் தற்கொலையாளி புகமுயன்ற சமயம் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கடையின் முன்புறம் நின்றிருந்த காவலாளி தற்கொலையாளியைச் சோதனையிட முயன்றதை அடுத்து அவர் குண்டை அங்கேயே வெடிக்க வைத்துள்ளார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

தாக்குதலில் அந்தக் காவலரும் தற்கொலையாளியும் உயிரிழந்தனர். கடையில் இருந்த வேறு இருவரும் உயிரிழந்தனர்.

"கடைக்கு வெளியே இருந்து தீ வாசல் வழியாக கடைக்குள் நுழைவதைக் கண்டோம். உள்ளே இருந்தவர்கள் எல்லோரும் பீதி கொண்டு வெளியே பாய்ந்தனர்" - என்றார் சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர்.

பலஸ்தீன அதிகார சபைக்கான புதிய அமைச்சரவைக்குரிய அங்கீகாரத்தை புதிய பிரதமர் மொஹமட் அப்பாஸ் வென்று, பலஸ்தீன ஆயுததாரிகளுக்கு எதிராகத் தான் நடவடிக்கை எடுப்பேன் என்று உறுதி கூறிய சில மணி நேரங்களில் இந்தப் புதிய தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் புதிய பலஸ்தீன அதிகார சபையும் தற்கொலைத் தாக்குதல்களைக் கட்டுப்படுத்துவதில் முழுமையாகத் தோற்றுவிட்டது என்பதையே காட்டுகின்றது என்று இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது.

அதேசமயம் - மொஹமட் அப்பாஸின் புதிய பலஸ்தீன அதிகாரசபை இந்தத் தாக்குதலைக் கண்டித்துள்ளது. "அர்த்தமுள்ள ஒரு சமாதானத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு வசதியாக தற்கொலைத் தாக்குதல்களை பலஸ்தீன ஆயுததாரிகள் நிறுத்தவேண்டும்" - என்று அப்பாஸ் கூறியுள்ளார்.

அமெரிக்காவும் இந்தத் தற்கொலைத் தாக்குதலைக் கண்டித்துள்ளது.

அமெரிக்காவின் ஏற்பாட்டில் தற்போது தயாரிக்கப்பட்டிருக்கும் மத்திய கிழக்கின் புதிய சமாதானத் திட்டமும் இந்தத் தாக்குதலால் பாதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### பக்தாத்தில் மற்றொரு அதிகாரி சரண்!

பக்தாத்,மே1

ஈராக்கின் தென்பகுதியில் அமைந்துள்ள இரண்டாவது பெரிய நகரின் ஆளுநராக சதாம் ஆட்சிக் காலத்தில் பதவி வகித்த ஹமீட் தௌபீக் திக்ரிட் அமெரிக்கப் படைகளிடம் சரணடைந்துள்ளார்.

ஈராக்கில் அமெரிக்கா தீவிரமாகத் தேடி வரும் 55 பேரில் 15 ஆவதாக அவர்கள் வசப்பட்டிருக்கும் நபர் இவராவர். அமெரிக்கப் பட்டியலில் இருந்த 44 ஆவது நபர் இவர்.

இவர் பக்தாத்தில் அமெரிக்கப் படைகளிடம் சரணடைந்ததாக ஈராக்கிய தேசிய காங்கிரஸ் கட்சிப் பேச்சாளர் தெரிவித்தார்.

அதேசமயம், அமெரிக்கப்படையினர் சதாம் ஹுசைனைத் தேடி தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சதாமின் சகாக்கள் பலர் அமெரிக்கா வசம் இருந்தாலும் சதாமின் மறைவிடத்தை கண்டுபிடிக்க முடியவில்லை. (ம)



பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் உள்ள சைனா டவுண் என்ற இடத்தில் ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பெரும்பாலும் சீன வம்சாவளியினரைக் கொண்ட இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தம்மை மணிலா அரசு தனிமைப்படுத்தி வைத்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சார்ஸ் நோய் அச்சம் காரணமாக இவர்கள் தனிமைப் படுத்தப்பட்டனர்.

# புதிய அரசு அமைக்கும் கூட்டம்: ஐ. நா. பிரதிநிதி அதில் இல்லை

நியூயோர்க்,மே1

ஈராக்கில் இடைக்கால அரசை நிறுவ அமெரிக்கா ஏற்பாடு செய்துள்ள கூட்டத்துக்குத தமது பிரதிநிதியை அனுப்ப ஐ.நா. மறுத்துவிட்டது. அதன் பொதுச் செயலர் கோபி அனான் இந்த மறுப்பைத் தெரிவித்தார்.

ஈராக்கின் வெவ்வேறு குழுக்களும் அமெரிக்கப் பிரதிநிதிகளும் பங்கேற்கும் இக்கூட்டம் பக்தாத்தில் நடைபெறுகின்றது.

அதில் பங்கேற்கும்படி ஐ.நா. சபைக்கு அமெரிக்கா அழைப்பு விடுத்தது. ஆனால், ஈராக் புனரமைப்புப் பணியில் ஐநா. ஈடுபடுமா என்பது உறுதியாகாத நிலையில், புதிய இடைக்கால அரசு தொடர்பான கூட்டத்தில் பங்கேற்க ஐநா.பிரதிநிதிகளை அனுப்ப இயலவில்லை என்று கோபி அனான் தெரிவித்தார்.

ஈராக்கில் மனிதாபிமான உதவிகளைச் செய்வதுடன், ஐ.நா. தனது பணிகளை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா கூறியிருந்தது. எனவே, புதிய இடைக்கால அரசை அமைப்பதில் ஐ.நா. ஈடுபடக்கூடாது என பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளான ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் கேட்டுக்கொண்டதனால் அனான் இந்த முடிவை எடுத்ததாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஐநாவைப் போன்றே தமது பிரதிநிதிகளை ஈராக்குக்கு அனுப்புவதில் சீனா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளும் ஆர்வம் காட்டவில்லை. (ம)

# அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ஈராக்குக்கு விஜயம்

பஸ்ரா,மே1

அமெரிக்க பாதுகாப்புத் துறைச் செயலர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் நேற்று ஈராக்குக்கு வந்து சேர்ந்துள்ளார்.

அமெரிக்கப் படைகள் பக்தாத்தில் சதாம் ஹுசைனை ஆட்சியில் இருந்து அகற்றிய 3 வாரங்களின் பின்னர் ஈராக்குக்கு விஜயம் செய்யும் முதலாவது அமெரிக்கத் தலைவர் ரம்ஸ்பீல்ட் ஆவார்.

சவூதி அரேபியாவில் இருந்து ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான பஸ்ராவுக்கு நேற்று வந்து சேர்ந்தார். ஒரு வாரம் அவர் ஈராக்கில் சுற்றுப் பயணம் செய்யவுள்ளார்.

நேற்றுப் பின்னதாக பஸ்ராவில் இருந்து தலைநகர் பக்தாத்துக்கு செல்லவிருந்தார் ரம்ஸ்பீல்ட்.

"இராணுவச் சப்பாத்துக்களின் கீழ் இருந்து ஈராக்கிய மக்கள் இப்போது விடுவிக்கப்பட்டு விட்டார்கள். இது அவர்களுக்கு மட்டும் நன்மையான விடயம் அல்ல. அந்தப் பிராந்தியத்துக்கும் உலகத்துக்குமே நன்மையான விடயங்களாகும்" - என்று செய்தியாளர்களிடம் பேசுகையில் ரம்ஸ் பீல்ட் சொன்னார்.

ரம்ஸ்பீல்டின் ஈராக் விஜயம் அங்கு பிரபலப்படுத்தப்படவில்லை. அவரது பாதுகாப்புக் காரணங்களுக்காக அமெரிக்கப் படையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

பலூஜா நகரில் அமெரிக்கப் படையினரின் தாக்குதல்களின் 15 ஈராக்கியர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னர் ரம்ஸ் பீல்ட் ஈராக்குக்கு விஜயம் செய்துள்ளதால், ஆத்திரமடைந்திருக்கும் ஈராக்கியர்களால் ஆபத்து ஏதும் ஏற்படக்கூடும் என்றும் -

பக்தாத்திலும் ஏனைய இடங்களிலும் இன்னும் மறைந்துள்ளதாகக் கருதப்படும் ஈராக்கியப் படையினர் ரம்ஸ்பீல்ட் மீது தாக்குதல் நடத்தக்கூடும் என்றும் -

அமெரிக்கப் படையினர் கருதுவதால் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் சொன்னார். (ம)



திங்களன்று இரவு பலூஜா நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் மீது அமெரிக்கப் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதை மேலே உள்ள படத்தில் காணலாம். அந்தச் சம்பவத்தில் உயிரிழந்த ஒருவரின் சடலத்தை இறுதிக் கிரியைகளுக்காக அவரது உறவினர்கள் எடுத்துச் செல்வதை அருகில் உள்ள படத்திலும் காணலாம்.

# பலூஜாவில் மீண்டும் தாக்குதல் ஈராக்கியர் இருவர் உயிரிழப்பு!

## அமெரிக்க இராணுவத்தினர் கைவரிசை

பக்தாத்,மே1

ஈராக் தலைநகர் பக்தாத்தின் மேற்கே 30 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பலூஜா என்ற நகரில் நேற்றும் அமெரிக்கப் படைகள் பொதுமக்கள் மீது நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இருவர் கொலலப்பட்டதாக அல்ஜெஸீரா தொலைக்காட்சி தெரிவித்தது.

இந்த நகரில் அமெரிக்கத் துருப்பினருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது கடந்த திங்களன்று இரவு அமெரிக்கத் துருப்பினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 13 பேர் உயிரிழந்த சம்பவம் இடம்பெற்று ஒரு நாள் கடந்த நிலையில், மீண்டும் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

"ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுக் கொண்டிருந்தது. சில இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதை விட்டு விட்டு அமெரிக்கத் துருப்பினரைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அதை அடுத்து அங்கு கூடியிருந்த மக்கள் மீது அமெரிக்கத் துருப்பினர் கண்மூடித்தனமான தாக்குதல்களை ஆரம்பித்தனர்.

"இதில் இரு ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர். மேலும் நான்கு பேர் காயமடைந்தனர்" - என்று அல்ஜெஸீரா தொலைக் காட்சியின் செய்தியாளர் பலூஜாவில் இருந்து தொலைபேசி மூலம் தெரிவித்தார்.

நகரின் பாடசாலையில் இருந்து அமெரிக்கப் படையினர் வாபஸ் பெறப்பட்டதைக் கொண்டாடும் வகையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அவர் மேலும் கூறினார்.

இந்தப் பாடசாலையை அமெரிக்கப் படையினர் பயன்படுத்தி வந்தனர். அங்கிருந்து அவர்களை வெளியேறக் கோரி ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீதே திங்களன்று இரவு அமெரிக்க சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

ஆனால், சதாமின் பிறந்த நாளை அவர்கள் கொண்டாடியதாகவும் அதன் போதே அந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும் அமெரிக்கர்கள் சார்பில் கூறப்படுகின்றது. ஆர்ப்பாட்டக்காரர்கள் தம மீது சுட்டதன் காரணமாகவே தாம் திருப்பிச் சுட்டதாக அமெரிக்கத் துருப்பினர் கூறுகின்றனர். (ம)



# யாழ்.நகரின் அவசியத் தேவை கழிவு நீர் வடிகால் திட்டம்

ஏ9 பாதை திறப்பு, புனரமைப்பு வேலை ஆய்வுகள், வெளிநாட்டு உதவிகள் என்று ஒரே அபிவிருத்தி பற்றி பேசிக்கொண்டிருக்கும் இக்கால சூழ்நிலையை விட்டால் யாழ். நகர வடிகால் அமைப்புத்திட்டத்தை நிறைவேற்ற வேறு சந்தர்ப்பம் கிடையாது.

நிச்சயமாக யாழ். நகர வடிகால் அமைப்புத்திட்டம் சமகாலத்தில் உடன




டியாக ஆரம்பிக்கப்படவேண்டும். எந்த நகர அபிவிருத்தியும் ஆய்வுக் குட்படுத்தும்போது நகரை இரு கூறாகப் பிரிப்பர். அவ்விரு கூறுகளாவன

★ நிர்வாகத் தலைநகர்

★ வர்த்தகத் தலைநகர்

நாட்டில் பூரண சமாதானம் ஏற்பட்டவுடன் யாழ்.நகர அபிவிருத்தித்திட்டம் செயற்படுத்தப்படும். அதற்கான செயற்பாடுகள் ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது அரச அதிபரால் மேற்கொண்டு வருவது மகிழ்ச்சிக்குரிய காரியம். எனவே, தற்போதைய யாழ். நகரம் மேற்சொல்லப்பட்ட ஏதாவது ஒன்றுக்குள் வரும். எனவே பூரணமான யாழ்.நகர அபிவிருத்தித்திட்டம் வகுக்கும்வரை வடிகால் அமைப்புத்திட்டம் பிற்போடப்படவேண்டும் என்றில்லை.

யாழ். நகரின் நிரந்தரவாசிகள், நாளாந்தம் யாழ்.நகர் வந்து செல்லும் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆகியோரின் நலன் கருதி இதனை உடன் செயற்படுத்த வேண்டும்.

பெரும் பிரச்சினையாக இருந்து தற்காலத் தீர்வுடன் செயற்படும் யாழ். போதனா வைத்தியசாலையின் கழிவுகள், கழிவுநீர் அகற்றும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும்.

ஏற்கனவே இருந்த வடிகால்கள் முறையாகப் பேணப்படாமை, கட்டடம் கட்டுவோரின் சுயநலத்தால் வடிகால்கள் சேதமாக்கப்பட்டமை, நகரவாசிகளின் வீட்டு பாவனைக் கழிவு நீர் செல்ல வசதிகள் செய்யப்படாமை போன்றவை இன்றைய பிரச்சினைகளாகும்.

ஒரு சில மணி நேரம் கடும்மழை பெய்தால் யாழ். பஸ்நிலையத்தில் வெள்ளம் நிற்பதுடன் நீர் விரைவாகச் செல்ல இயலாதநிலை ஏற்படுகிறது.

கொழும்பில் உள்ளது போன்று குடியிருப்புகளில் இருந்து கழிவுகளை வெளியேற்ற நிரந்தரமாக நிலத்திற்கடியிலான கழிவு வடிகால் அமைப்பு இல்லை. உலகம் எங்கோ போய்விட்டது. நாம் இன்னும் மலசலக்குழிகள் அமைப்பதில்தான் உள்ளோம்.

**வி.எஸ்.சொக்கலிங்கம்**
யாழ்ப்பாணம

யாழ்.மாநகரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை சில விதிமுறைகளுக்கமைய (Septic Tanic) நிலத்தின் கீழான மலசலகுழிகள் கட்டவேண்டும் என்று சட்ட திட்டங்கள் அமுல்படுத்தினாலும் பெரும்பாலும் நகரில் அப்படி அமைக்கப்படவில்லை.

மாரிகாலத்தில் கிணற்றின் ஊற்றுகளும் மலசல கூடத்தின் கழிவு நீரும இரண்டறக் கலக்கின்றன. நீர்மட்டம் உயர இரண்டும் சந்திக்கின்றன. இதனைத் தடுக்க முடியாது. அண்மைக் காலத்தில் புதுவித காய்ச்சல் பல நாள்களாகத் தொடர்ந்து பல உயிர்கள் பலியானமை தெரிந்ததே.

மேலே கூறப்பட்டவை சிலவே. எனவே யாழ்.நகர அபிவிருத்தியில் இன்று முன்னுரிமை முதன்மை வழங்க வேண்டிய திட்டம் எதுவென்றால் யாழ்.நகர வடிகால் அமைப்பு புனரமைப்பு அல்லது மறு சீரமைப்புத் திட்டமேயாகும்.


**சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பித்தோர் உடன் தொடர்புகொள்ளவும்**

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

சின்னவன் ஸ்ரீபன்,
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை இல. - 30
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
222 5657

சின்னவன் ஸ்ரீபன்,
252, யாழ்.வீதி,
மானிப்பாய்.
0777 582844
222 5278
222 3600

(C-27634)


# பாலங்கள் விரைவில் திருத்தப்படும்

மாவட்டத்திலுள்ள 17 பாலங்களை அடுத்த மாதமளவில் புனரமைத்துத் தருவதாக புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு உறுதியளித்துள்ளதாக வடபிராந்திய வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் எஸ்.சிறினிவாசன் தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கில் உள்ள 57 பாலங்கள் புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சால் புனரமைக்கப்படவுள்ளன. இந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 17 பாலங்களும் புனரமைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.(ஒ-12)

## கல்வியங்காடு சந்தி அருகே

# பருத்தித்துறை வீதி படுமோசமாகச் சேதம்

வலி.கிழக்கு,மே1

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பிரதான வீதியில் கல்வியங்காடு சந்திக்கு அப்பால் வீதியின் நடுவே ஆழமான பள்ளங்கள் காணப்படுகின்றன.

வீதியூடாக வாகனங்களும், பாதசாரிகளும் பயணம் செய்யமுடியாத அளவுக்கு வீதி அவ்விடத்தில் பலத்த சேதமடைந்திருக்கிறது. நீண்ட காலமாக இதனை திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

வாகனப் போக்குவரத்து அதிகரித்திருக்கின்ற இன்றைய சூழ்நிலையில் பிரதான வீதி இவ்வாறு சேதமடைந்து போயிருப்பது குறித்து பயணிகள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

கல்வியங்காடு சந்தைப் பகுதியை அண்டியுள்ள இந்த வீதியில் அடிக்கடி விபத்துக்களும் ஏற்பட்டு வருகின்றன.

வீதியின் நடுவே காணப்படும் பளளங்களை மண்போட்டு செப்பனிடவாவது அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா என்று பலரும் விசனத்துடன் கேட்கிறார்கள்.

(ஜ-180)

# தேசிய மரதன் ஓட்டப் போட்டி யாழிலிருந்து 4 பேர் செல்வர்

யாழ்ப்பாணம்,மே1

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு மரதன் ஓட்ட வீரர், வீராங்கனைகள் தேசிய மட்டப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாகாண மட்ட மரதனோட்டப் போட்டி அண்மையில் திருகோணமலையில் நடைபெற்றது.

இதில் யாழ்.மாவட்டத்தின் சார்பாக ஆண்கள் பிரிவில் பங்குபற்றி மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற எஸ்.காந்தரூபன் (சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு), ஆறாம் இடத்தைப் பெற்ற எஸ்.யதீஸ்வரன் (வேலணைப் பிரதேச செயலர் பிரிவு) ஆகியோரும் -

பெண்கள் பிரிவில் 4 ஆம் இடத்தைப்பெற்ற எஸ்.பிறேமலட்சுமி (நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவு), என். பிறேமினி (தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு) ஆகியோரும் -

தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(ஒ-5)

## சாயி சிந்தனை




### எண்ணமே மூலகாரணம்

தீய எண்ணங்களை உள்ளே வைத்துக்கொண்டு மனிதன் நல்ல செயல்களில் ஈடுபடுவானானால் அக்காரியம் கூடத் தீயதாக மாறி விடுகிறது. வெளிப்புறமாகப் பார்க்கும் போதுதான் செய்யும் செயல்கள் நல்லவையாகக் கண்ணில் படுகின்றன. ஆனால், உட்புறமாகக் கூறும் போது தீய எண்ணங்கள் நிறைந்திருப்பதால் செய்வதனைத்தும் தீமைகளாய் முடிகின்றன. வெற்றிக்கும் தோல்விக்கும் எண்ணங்களே மூல காரணம். தேகம் என்கிற மாளிகைக்கு எண்ணங்கள் கூடிய மனம் அஸ்திவாரம் போன்றது. மாளிகை எவ்வளவுதான் அழகாகக் காட்சியளித்தாலும், அதன் பத்திரத் தன்மை அஸ்திவாரத்தைப் பொறுத்தே அமைகின்றது. ஆகவே, மனதில் ஓடும் எண்ண ஓட்டங்களே மிகவும் பிரதானமானவை! எண்ணங்கள் என்ற அஸ்திவாரம் பலமாக இருக்கையில் மனித வாழ்க்கை என்னும் மாளிகையைப் பல மாடிக் கட்டமாகக் கட்ட முடியும். கலியுகத்தின் விளைவாய் மனித மனம் முழுவதும் குப்பையாக, தீய குணங்கள் நிறைந்து, வக்கிரமான எண்ணங்களுடன் காட்சி தருகிறது. ஆகையால் அத்தகைய எண்ணங்களை விரட்டி விட்டு தூய எண்ணங்களால் நிரப்பி வைக்க முழுமையான முயற்சி அவசியம். இறைவன் திருப்பெயரை விடச் சிறந்தது வேறெதுவும் இல்லை. நாமஸ்மரனை மூலம் எத்தகைய சமுத்திரத்தையும் தாண்ட முடியும். வாழ்க்கை என்னும் சம்சாரக் கடலைக் கடக்க உதவும் படகுதான் இறைவன் திருநாமம்.

ஆதாரம்: சனாதன சாரதி


**ஆறாம் ஆண்டு நினைவு அஞ்சலி**



**செல்வன் காராளபிள்ளை விநாயகசிவம்**

(கண்ணன் - நயினாதீவு, 5 ஆம் வட்டாரம்)

அன்னை மடியில் 01-11-1967

ஆண்டவன் அடியில் 06-05-1997

காராள பிள்ளை மகன் கண்ணன் பரீஸ் நகரில்
சீரான ஈசுநத்துச் சித்திரையில் - நேராக
அச்சுவினி சேரும் அமரவாஸச (வி) நாயகர் தாள்
சித்தமுறச் சென்றான் சிறப்பு

விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ்
T.P.071 - 248726

(17399)

உன் துயரால் வாடி நிற்கும்:
குடும்பத்தினர்.

**கண்ணீர் அஞ்சலி**

தட்டாதெரு கலாஜோதி இளைஞர் ஒன்றியத்தினதும் சனசமூக நிலையத்தினதும் முன்னாள் பெருந்தலைவராக இருந்து சேவையாற்றிய

**கனகசபை இரத்தினம்** (முன்னாள் செய்தியாளர்)

அவர்களின் மறைவையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தட்டா தெரு,
யாழ்ப்பாணம். (17382)

கலாஜோதி இளைஞர் ஒன்றியமும்
சனசமூக நிலையமும்.

**கண்ணீர் அஞ்சலி**

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் சுகாதார சேவையாளர்

**பொன்னம்பலம் தேவராசா**

அவர்களின் மரணச்செய்தி எம்மை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தி உள்ளது. அன்னார் சேவையில் கடமையாற்றும் போது சிற்றூழியர் சங்கப் பிரதிநிதியாக இருந்து தற்காலிக வேலை நீக்கம்பெற்ற ஊழியர்கள் சார்பில் வாதாடி அவர்களுக்கு வாழ்வளித்த பெருந்தகையாவார்.

அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்பதோடு, துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

சங்கானை. (17397) - நவரத்தினம் குடும்பத்தினர்.

உதயன்

# விடுதலைப் புலிகளுக்கு பிரதமரின் கடிதம்

சமாதானப் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்திப் புலிகள் அனுப்பிய கடிதத்துக்கு இலங்கை அரசின் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க பதில் அனுப்பிவிட்டார்.

தமது மூலக் கடிதத்தில் விடுதலைப் புலிகள் குறிப்பிட்ட பல பிரச்சினைகளுக்கு தெளிவான பதில் தராமல் நழுவித் தப்பியிருக்கின்றார் பிரதமர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலமும் அதன் பின்னர் இடம்பெற்ற பல சுற்றுப் பேச்சுக்களின் போதும் இணக்கம் காணப்பட்ட விடயங்களை - அரசுத் தரப்பு நிறைவேற்றவேண்டிய கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை - செயற்படுத்துவதற்கு அரசுத்தரப்புக்கு கால அவகாசமும் இடைவெளியும் வழங்கும் விதத்திலேயே சமாதானப் பேச்சுக்களைத் தாங்கள் இடைநிறுத்தி உள்ளார்கள் என்பதனை புலிகள் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியிருந்தார்கள்.

ஆனால், இந்தக் கடப்பாடுகளை - பொறுப்புகளை - இன்ன காலவரையறைக்குள், இன்ன வகையில் நிறைவு செய்வார் என்பதை பிரதமர் தமது பதில் கடிதத்தில் தெளிவுபடுத்தவேயில்லை.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள சமாதான முயற்சிகளினால் நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்பட்டுள்ள நன்மைகளை தமது கடிதத்தில் விவரித்துள்ள பிரதமர், யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குச் செய்ய வேண்டியவை இன்னும் நிறைய உண்டு என்று புலிகள் தெரிவித்திருப்பதைத் தாம் ஒப்புக்கொள்வதாகவும் குறிப்பிடுகின்றார்.

வடக்கு-கிழக்கில் வழமை நிலையை ஏற்படுத்துவதற்கு எடுக்கும் காலம் இழுபடுவது குறித்தே புலிகள் தமது கடிதத்தில் பெரும் விசனம் தெரிவித்திருந்தனர்.

வழமை நிலையை ஏற்படுத்துவதற்கு கால வரையறையுடன் கூடிய தனது செயற்பாட்டுத் திட்டத்தை தனது பதிலில் திட்டவட்டமாக முன்வைக்க வேண்டிய பிரதமர், அதைச் செய்யவேயில்லை. அதைச் செய்யாமல் விட்டு விட்டு, இப்படிக் காலம் இழுபடுவது குறித்து புலிகளோடு சேர்ந்து அரசுத் தரப்பும் பொறுமை இழந்தவர்களாக உள்ளனர் என்று ஒரு போடு போட்டுத் தப்பிக்கொள்ள முயல்கிறார்.

இது, நோயின் உபாதை நீங்க மருந்து கேட்டு மருத்துவரிடம் சென்றால், அவர் மருந்து தருவதை விடுத்து, உபாதையால் தவிக்கும் நோயாளியுடன் சேர்ந்து தாமும் ஒப்பாரி வைக்கும் செயல் போன்றல்லவா உள்ளது?

வடக்கு - கிழக்கில் வழமைநிலை திரும்புவதற்கு - இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி இயல்பு வாழ்க்கை வாழ்வதற்கு - பெரும் முட்டுக்கட்டையாக இருப்பது உயர் பாதுகாப்பு வலயம் என்ற கெடுபிடிதான்.

அதுவே, தற்போதைய அரசியல் நெருக்கடியில் - சமாதான முயற்சிகளின் பின்னடைவில் - முக்கிய பின்னணியாகவும் அம்சமாகவும் அமைந்திருக்கின்றது.

அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தாம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றார் என்பது குறித்து பிரதமர் சூசகமாகத்தன்னும் தனது பதிலில் ஏதேனும் கோடி காட்டவில்லை.

மாறாக "பேச்சுக்கு வாருங்கள், அப்போது இந்தப் பிரச்சினை தொடர்பாக ஜெனரல் நம்பியார் தரவிருக்கும் அறிக்கையைத் தருகிறோம்" - என்ற சாரப்பட விட்டேத்தியாகப் பதில் தந்திருக்கின்றார் அவர்.

ஆக, பிரதமரின் கடிதத்தில் உருப்படியாகக் குறிப்பிடப்பட்டுள்ள - திட்டவட்டமான ஒரு செயற்பாடு என்று கூறக்கூடிய - ஒரேஒரு விடயம், யாழ். நகரின் மத்தியில் கஸ்தூரியார் வீதி, கஸ்தூரியார் ஹோட்டல் பகுதிகளிலுள்ள படைத்தளத்தை யாழ்.கோட்டைப் பகுதிக்கு இடம் மாற்றுவது பற்றிய அறிவிப்புத்தான்.

அந்த முடிவு கூட புலிகளோடு கலந்தாலோசிக்காமல் - யாழ்.தமிழ் மக்களின் கருத்துக்களைக் கவனத்தில் கொள்ளாமல் - அரசு மற்றும் இராணுவத் தரப்புக்களினால் ஒரு தலைப்பட்சமாக எடுக்கப்பட்டதே.

இந்தப் பின்னணியில் பிரதமரின் உப்புச்சப்பற்ற பதில் கடிதம் விடுதலைப்புலிகளின் தலைமையைத் திருப்திப்படுத்துமா, தடம் விலகியிருக்கும் சமாதானப் பேச்சுக்களைச் சரியான பாதைக்குத் திரும்பக்கொண்டு வருமா என்பதெல்லாம் சந்தேகமே!

செயற்பாடுகளின் அடிப்படையில்

# உள்ளூராட்சி மன்றங்கள் இடையே போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே1

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையே செயற்பாடுகளின் அடிப்படையிலான போட்டிகள் அடுத்த மாதம் 15ஆம் திகதிமுதல் நடைபெறவுள்ளன.

இதற்கான புள்ளியிடும் நடைமுறைகள் எதிர்வரும் 18ஆம் திகதிமுதல் நடத்தப்படவுள்ளதாக பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறிவித்துள்ளார்.

2003ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள், முகாமைத்துவ அபிவிருத்தி, நூலகம், உப அலுவலகங்கள் என்பவற்றை ஆராய்ந்து புள்ளியிடுவதுடன்-

சிறந்த முறையில் செயற்படும் சபைகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட மட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையிலான போட்டிகளை நடத்தவதற்கு சபையின் செயலாளர் தலைமையில் குழு தெரியப்பட்டு அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை -

புள்ளியிடலுக்காக வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து உயரதிகாரிகள் மூவர் கலந்துகொள்வர் என தெரிவிக்கப்படுகிறது. (ஒ-185)

## நாட்டு நடப்பு

### கொடுத்திடு சம்பளத்தை கூட்டி

ஒடுங்கிய நாகம் கூட
இசை கேட்டு எழுந்து ஆடும்
நடுங்கிடும் கிழவன் கூட
நல்லுணவினால் எழுவான் துள்ளி
படுக்கையாய் கிடக்கும் பாலன்
பாலூட்ட குடித் தெழுவான்
ஒடுங்கியே காரியாலயத்தில் நாளும்
உருக்குலைந்த ஊழியரெல்லாம்
துடுக்குடன் துள்ளிப் பாய்ந்து
துரிதமாய் வேலை செய்ய
கொடுத்திடு சம்பளத்தைக் கூட்டி
குறையொன்றும் வந்திடாது
படுத்திடும் இந்த நாடு
பையவே இவர்கள் தூங்கில்
எடுத்திடு இம்முடிவை இன்றே
இந்த "மே" தினத்தில் இப்போ.

- வீ.சு.டகவி.

வர்த்தமானி அறிவித்தலாலின்றி

# கட்டளைச் சட்டத்தின் கீழேயே பாதுகாப்பு வலயம் உருவானது!

யாழ்.படைகளின் தளபதி விளக்கம்

யாழ்ப்பாணம்,மே1

உயர் பாதுகாப்பு வலயம் என்பது அரசின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்டதல்ல. 1993 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் திகதி அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பகுதி இராணுவத்தினால் உருவாக்கப்பட்டது.

யாழ். மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத பொன்சேகா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலத்திற்கு அனுப்பிய விளக்கக் கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் கடந்த ஒரு வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் மீள்குடியமர்வு தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நானூறுக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களினால் செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக விளக்கமளிக்குமாறு மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம், கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி யாழ்.மாவட்ட படைகளின் தளபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் யாழ்.படைகளின் தளபதி சரத் பொன்சேகா மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்திற்கு விளக்கக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உயர் பாதுகாப்பு வலயம் என்பது வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசால் வெளியிடப்படவில்லை.

மாறாக அமைச்சரவையின் அனுமதியுடன் 1993ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் திகதியன்று பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இந்த உயர்பாதுகாப்பு வலயம் என்ற பகுதி உருவாக்கப்பட்டு இராணுவத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இக்கட்டளைச் சட்டத்தின் கீழேயே பயங்கரவாதத் தடைச் சட்டம் இருந்து வந்தது. பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தில் கூறப்பட்டதற்கு இணங்க - ஜனாதிபதியின் உத்தரவிற்கேற்ப - படையினர் தமது பாதுகாப்பிற்காக தாங்கள் விரும்பிய இடங்களை உயர்பாதுகாப்பு வலயம் என்றபகுதிக்குள் உள்ளடக்க முடியும்.

- இவ்வாறு அவர் விளக்கியுள்ளார்.

இதற்கு மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். இணைப்பாளர் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழ் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பகுதி அடங்கியது என்பதனை தனக்கு உடனடியாக அறியத்தருமாறு இராணுவத் தளபதிக்கு அவசரக்கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (ஒ-5)

# மருதனார்மடம் சந்தையை சீர்படுத்தாவிடில் போராட்டம்!

## அங்கு வியாபாரத்தில் ஈடுபடுவோர் எச்சரிக்கை

வலி. தெற்கு,மே1

மருதனார்மடம் சந்தையின் குறைபாடுகள் விரைவில் சீர் செய்யப்படாவிட்டால் சந்தையை இயங்கவிடாது முற்றுகைப் போராட்டம் நடத்த நேரிடும்.

- இவ்வாறு எச்சரித்துள்ளனர் மருதனார்மடம் சந்தை வியாபாரிகள்.

இது தொடர்பாக வியாபாரிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டதாவது:-

மருதனார்மடம் சந்தையில் வெள்ளம் தேங்காது செப்பனிடுவதற்காகப் பறிக்கப்பட்டுள்ள கற்கள் சீர்செய்யப்படாமையால் வியாபாரிகளும், நுகர்வோரும் தினமும் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

சந்தையின் பள்ளமான பகுதிகளில் சேறும், வெள்ளமும் தேங்கி நிற்பதைத் தடுப்பதற்காக சந்தையில் இக்கற்கள் பரவப்பட்டுள்ளன.

சல்லிகள், ஓடுகள், கூரான கற்கள் என்பன சீர்படுத்தப்படாமையால் சந்தைக்குவரும் சுகவரின் கால்களையும், அவை பாதிப்பதாகக் கூறப்படுகிறது.

தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடும் இச்சந்தையில் பரவியபடும் கஞ்சல்கள், குப்பைகள் சீராக அகற்றப்படாமையால் அவை சுகாதார சீர்கேட்டை விளைவிக்கின்றன.

இச்சந்தைக்கான நிரந்தர காவலாளிகள் எவரும் நியமிக்கப்படாமையால் சந்தை வியாபாரிகளும் சந்தைக் குத்தகையாளரும் இணைந்து தமது பணத்தில் இரண்டு காவலாளிகளை நியமித்துள்ளனர் ஆனால், சந்தையின் நாற்புறமும் திறந்த நிலையில் இருப்பதால் இக்காவலாளிகளுக்கே பாதுகாப்பில்லாத நிலை ஏற்படுகின்றது.

சந்தைக்கு வருபவர்களின் பாவனைக்கென அமைக்கப்பட்டுள்ள மலசல கூடங்களும் சுகாதாரமற்ற நிலையில் காணப்படுகின்றன.

2004 ஆம் ஆண்டு சந்தையை குத்தகைக்கு விடுவதற்கு முதல் மேற்படி சந்தையின் குறைபாடுகள் சீர்செய்யப்படாவிட்டால் சந்தையை நடத்தவிடாமல் போராட்டம் நடத்துவோம் என்று சந்தை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-152)

### நாளை

சித்திரை 19
வெள்ளிக்கிழமை
02.05.2003
திதி : பிரதமை
முன்னிரவு 8.13 வரை
நட்சத்திரம் : பரணி
பிற்பகல் 1.48 வரை
கார்த்திகை விரதம்
சுபநேரம் : 5.57 - 7.27
ராகுகாலம் : 10.27 - 11.57
(பழைய நேரப்படி)

### உதயனுக்கு

அறிவுரை கூறுவதற்கும் உதவி செய்வதற்கும் இடையே நீண்ட இடைவெளி உள்ளது.

# பளையிலிருந்து திரும்பியோரிடம் அல்லைப்பிட்டியில் கடும் கெடுபிடி!

## நலன் காப்பகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே1

பளையில் கடந்த 28ஆம் திகதி இடம்பெற்ற ஆனையிறவுத் தளத்தகர்ப்பு மற்றும் தீச்சுவாலை முறியடிப்பு வெற்றி விழாவில் கலந்துகொண்டுவிட்டு வீடுகளுக்குத் திரும்பிய தீவகப் பிரதேச மக்கள், அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் கெடுபிடிகளுக்குள்ளாக்கப்பட்டதாக தீவக மக்கள் நலன் காப்பகச் செயலாளர் தெரிவித்தார். வெற்றி விழா நிகழ்வுகளில் பங்குபற்றிய மக்கள், பளையிலிருந்து எடுத்துவந்த புகைப்படங்கள் மற்றும் புத்தகங்களை எடுத்துச்செல்ல அனுமதி மறுக்கப்பட்டதாகவும் -

இளைஞர் ஒருவர் இது தொடர்பாக சீருடையினருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதாகவும் -

அந்த இளைஞர் கடும் உடற் சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னர் அவரது பெயர், விவரங்கள் பெறப்பட்ட பின்னர் புத்தகங்கள் மீளவும் ஒப்படைக்கப்பட்டதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவங்கள் தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிடப்பட்டுள்ளதாக தீவக மக்கள் நலன் காப்பக செயலாளர் மேலும் தெரிவித்தார். (ஒ-9)

# தவறிவிட்டது

MINOLTA - DYMAGE - X STYLISH DIGITAL CAMERA (அளவு கிட்டத்தட்ட 31/2"x 31/2" x 1/2") 25-04-2003 வெள்ளிக்கிழமை நயினாதீவு ஆலயத்தருகில் தவறிவிட்டது. இக்கமெராவை, கமெராவின் மற்றைய இணைப்பொருள்களும் கணனியும் இல்லாது உபயோகிக்கமுடியாது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

த.பிருதிவிராஜ்
206, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
021 - 222 3353
சன்மானம் வழங்கப்படும். (17365)

# 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு 01 - 06 - 1973



அறியாய அழிப்பு 01 - 05 - 1990

## அமரர் கந்தசாமி விஜயக்குமார் (விஜயன்)

(சாவகச்சேரி, யா/டிறிபேக் கல்லூரி மாணவன்)

பதின்மூன்று வருடங்கள் பறந்தோடி போனென்ன! எம்
பதிதனிலே உன் நினைவும் பற்றறுந்து போய்விடுமா?
துன்பத்தில் எம்மை கதிகலங்க வைத்துவிட்டு – நீ
தூர தேசம் சென்று விட்டாயோ விஜயா...

டச்சு வீதி,
சாவகச்சேரி. (17077) - குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவில்

மலர்வு 30 - 03 - 1969



உதிர்வு 12 - 05 - 2002

## அமரர் தம்பிராசா சதீஸ்சந்திரன்

திதி: 01-05-2003

ஒளி விளக்காய்த் திகழ்ந்து எமக்கு நல்வழி காட்டிய எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாரதி வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். (17368) - குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 29 - 03 - 1933



மறைவு 01 - 04 - 2003

## அமரர் மார்க்கண்டு துரைராஜா

(முன்னாள் எழுதுவினைஞர்,
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்)

கடந்த (01.04.2003) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் சபீண்டிகரணக் கிரியைகளும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (01.05.2003) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

126, ஞானவைரவர் கோவில் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (17352) - குடும்பத்தினர்.

## யாழ்.வலயத்தில் தமிழ்த் தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே1

யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் தினப் போட்டி, ஜூன் மாதம் முதல் வாரத்தில் நடைபெறும் என யாழ்ப்பாணம், கோப்பாய் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர், இ.சிவஞான சுந்தரம் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான போட்டி ஜூன் மாதம் 6ஆம்,7ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு யாழ்.வைத்தீஸ்வர கல்லூரியிலும் -

கோப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான போட்டி அடுத்த மாதம் 2ஆம், 3ஆம் திகதிகளில் காலை 9.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் இடம்பெறும்.

இப்போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகள் இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னதாகத தத்தமது கோட்டங்களுக்கு அனுப்பிவைக்குமாறும் -

இந்தப் போட்டியில் முதலாம், இரண்டாம் இடத்தைப் பெற்ற மாணவர்கள் வலயப் போட்டிக்கு அனுமதிக்கப்படுவர் எனவும் - அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-180)

## மிதிவெடியில் சிக்கி இளைஞர் கால் சேதம்!

யாழ்ப்பாணம், மே1

உரும்பிராய் மூன்று கோவில் பகுதியில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் வலது காலின் பாதப் பகுதியை இழந்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த இராசன் சசிக்குமார் (வயது 21) என்பவரே மிதிவெடியில் சிக்கியவராவார்.

கட்டடத் தொழிலாளியான இவர், ஆலயம் ஒன்றில் கட்டடப்பணியை மேற்கொண்டிருந்தபோது இயற்கை உபாதையைக் கழிப்பதற்காக ஆலயச்சூழல் பகுதியில் உள்ள ஒதுக்குப் புறமான இடத்திற்குச் சென்றபோது மிதிவெடியில் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-5-139)

## மரவேலை பயிற்சிக்கு ஆள்சேர்ப்பு

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் மரவேலைத் தொழிற பயிற்சிக்கு பயிற்சியாளர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

சுன்னாகத்தில் இயங்கிவரும் இம மரவேலை பயிற்சி நெறி ஆறுமாத காலம் நடைபெறும். வலிகாமம் வடக்கு பிரிவில் இருந்து 15பயிற்சியாளர்களும் வலிகாமம் தெற்கு பிரிவில் இருந்து 15பயிற்சியாளர்களுமாக மொத்தம் 30பேருக்கு பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் இப்பயிற்சி நெறியை மேற்கொள்ள விரும்புவோர் செயலகத்தின் திட்டமிடல் பிரிவினருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

புனர்வாழ்வளிப்பு, அகதிகள் மீள் குடியமர்த்துகை அமைச்சின் மனித வள அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டின் கீழ் இப்பயிற்சி நெறி நடைபெற உள்ளது. (3-152)


கெனன் ஷார்ப்
போட்டோ கொப்பி மெஷின்கள்



உதிரிப்பாகங்கள்
மற்றும் பழுதுபார்த்தல்
• Drum • Upper Roller
• Blades Lamp (220V/ 110V)
• Bushings • Developer
• Conveyor Belts
டோனர் ரூ 600/= தொடக்கம்
உடன் பழுதுபார்ப்பு
சர்வீஸ் உத்தரவாதம்.
STARLIGHT ELECTRONICS
763, 2வது டிவிஷன்,
மருதானை வீதி, கொழும்பு-10.
Tel:693655, 681711. Fax 681712
E-mail:techno@sltnet.lk



நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

சித்தாரா பொன்னாங்காணி தைலம்

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்டஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி.இல.-021-222-2567
(16219)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சரவணமுத்து மாணிக்கம் ஆச்சாரியார்

தோற்றம் 04.08.1922 மறைவு 12.05.2002

திதி: 01.05.2003

ஆண்டொன்று ஆகிவிட்டதே
நம்பத்தான் முடியவில்லை
கண்ணீரும் காயவில்லையே
காலம்தான் கடந்து விட்டதே!

இன்று நடைபெறும் அன்னாரின் முதலாம் ஆண்டு திதிப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீனாட்சி அம்மன் கோவிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

என்றும் ஆறாத விழிநீருடன்:
சரஸ்வதி (மனைவி), பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(17387)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 1927 - 05 - 14



மறைவு 01 - 04 - 2003

## திருமதி வடிவேலு கண்டு

திதி: 01-05-2003 வியாழக்கிழமை

பாசத்தோடு எமை வளர்த்து
பண்புகளை எமக்கு ஊட்டி
ஊர் போற்ற எங்களை வாழவைத்த
எங்கள் இனிய அம்மாவே.....!
நாங்கள் உள்ள மட்டும் – எங்கள்
நெஞ்சங்களில் நீ வாழ்வாய்.

"பரிமள வாசம்"
கொற்றாவத்தை. (17364) - பிள்ளைகள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திருமதி சி.பாக்கியம்

மறைவு: 01.04.2003

அறுசுவை உணவு தந்து
எம் உயர்வுக்கு உரமாய்
உயிரூட்டிய அம்மா! அம்மம்மா!!
வீட்டுக்கு வந்தோரை
இன்முகங் காட்டி உபசரித்து
பயன்தந்து நீ வாழ்ந்த
வாழ்வதனை நினைக்குந் தோறும்
நெஞ்சமெலாம் ரணமாய்க் கொதிக்கிறது
பூமியினின்றும் நீ உதிர்ந்தாலும்
உன்பெயர் உரைக்கும்.
இறந்தும் இறவாத
உன் அழகு வதனம்
எம் மனக்கண் முன் நின்றும்
மறையாது தாயே!

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகளில் கலந்துகொண்டு சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.46, ஆசீர்வாதம் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (17384) - குடும்பத்தினர்.

# சிவாஜிலிங்கத்தைக் கொல்லுங்கள் என எம்மைத் தாக்கியோர் கூச்சலிட்டனர்!

## நாரந்தனை சம்பவ வழக்கு விசாரணையில் சாட்சியம்

யாழ்ப்பாணம்,மே1

சிவாஜிலிங்கம் காயங்களுடன் தப்பி ஓடுகிறான், அவனைக் கொல்லுங்கள் என்று நாரந்தனைப் பகுதியில் வைத்து எம்மைத் தாக்கியவர்கள் கூச்சலிட்டனர்.

கடந்த 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி தீவுப் பகுதியில் தேர்தல் பிரசாரப் பணிக்காகச் சென்ற தமிழ்க்கூட்டமைப்புப் பிரமுகர்கள் நாரந்தனையில் வைத்துத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் சாட்சியமளித்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் நடைபெற்றது.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் ஈ.பி.டி.பியின் தீவக இராணுவப் பொறுப்பாளர் நெப்போலியனைத் தான் கண்டதாகவும் அவர் அங்கு துப்பாக்கியுடன் ஓடித்திரிந்துகொண்டிருந்தார் எனவும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

தமது கட்சியின் ஆதரவாளரான கமலஸ்ரோன், கூட்டணியின் ஆதரவாளரான பேரம்பலம் ஆகியோரை ஆயுதங்கள், தடிகள், வாள்கள் ஆகியவற்றை வைத்திருந்த கும்பல் ஒன்று தாக்கியதைத் தான் கண்டதாகவும் கூறிய அவர், சம்பவம் நடைபெற்ற இடத்தில் மூன்றாம் எதிரியான ஜீவனைக் கண்டதாகவும் ஆனால், இரண்டாம் எதிரியான மதனராஜனை அங்கு காணவில்லை எனவும் பின்னர் சம்பவத்தில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு வந்துகொண்டிருந்தபோது ஊர்காவற்றுறை - வேலணைச் சந்தியில் பச்சை நிற 'பிக்கப்' வாகனம் ஒன்றில் மதனராஜனைக் கண்டதாகவும் சிவாஜிலிங்கம் தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் முதலாம் எதிரியான நெப்போலியன் மன்றில் ஆஜராகவில்லை. மருத்துவ அறிக்கையை அவர் மன்றுக்கு அனுப்பியிருந்தார். ஏனைய மூன்று எதிரிகளும் ஆஜராகியிருந்தனர்.

வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிவான், யாழ்.வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.ஸ்ரீ இராஜேஸ்வரனை அன்றைய தினம் மன்றில் ஆஜராகி வைத்திய அறிக்கையைச் சமர்ப்பித்துச் சாட்சியமளிக்குமாறும் பணிப்புரை விடுத்துள்ளார். (ஐ-10)

# வலப்பனையில் கோர பஸ் விபத்து! இரு பெண்கள், மூன்று சிறுவர்கள் பலி!!

## 70 பேர் காயம்; 16 பேர் ஆபத்தான நிலையில்!

கொழும்பு,மே1

வலப்பனையில் பயணிகள் பஸ் ஒன்று 300 அடி பள்ளத்தில் பாய்ந்ததில் ஐவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்; 70 பேர் காயமுற்று வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தெலிபக என்ற இடத்திலிருந்து நில்தண்டாஹின்ன நோக்கிச் சென்றுகொண்டிருந்த போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸே விபத்துக்குள்ளானது. அதில் 90 பயணிகள் பயணம் செய்துள்ளனர். பஸ்ஸின் சாரதி, நடத்துநர் ஆகியோர் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர்.

இரு பெண்களும் மூன்று சிறுவர்களுமே கொல்லப்பட்டுள்ளனர். வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட 70 பேரில் 16 பேரின் நிலைமை மோசமாக உள்ளதென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வலப்பனை, நீரியகொல்ல என்ற இடத்திலேயே இந்த விபத்து நடந்துள்ளது. அதிகமான பயணிகளை ஏற்றிச் சென்றதாலேயே விபத்து நடந்திருப்பதாக வலப்பனை பொலீஸார் தெரிவிக்கின்றனர். (ஐ)

# இரு காங்கிரஸ்களின் இணைப்புக் குறித்து கி. முஸ்லிம் எம்.பிக்கள் வெள்ளியன்று கூட்டம்

முஸ்லிம் காங்கிரஸ், அஷ்ரப் காங்கிரஸ் இணைப்புத் தொடர்பாக நாளை வெள்ளிக்கிழமை கூடும் கிழக்கு மாகாண முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும். ஒன்றியத்தின் கூட்டம் அன்று பிற்பகல் 3 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெறும்.

வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஒன்றியத்தின் கூட்டத்தில் இணைப்பு தொடர்பாக ஆதரவு தெரிவிக்கும் பிரேரணை ஒன்றை முன்வைக்கவிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட எம்.பியும தேசிய ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார். அந்தஇணைப்பை வரவேற்றிருக்கும் அவர், நு.ஆவும் இதில் இணைவதை விரும்புகிறார்.

அன்றைய கூட்டத்தில் ஜூன் மாதம் நடைபெறவுள்ள வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல், மூதூர் அசம்பாவிதங்கள், அதற்கான பரிகாரம், சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் ஆகியவை குறித்தும் பரிசிலனை செய்யப்படும். முஸ்லிம் அமைப்புகள் ஒன்றுபட வேண்டும் என்பதை நாம் வலியுறுத்துகின்றோம் எனவும் ஹிஸ்புல்லா எம்.பி. கூறினார். (ஐ)

# பொத்துவில் ஹோட்டல் மீது தாக்குதல்! 3 வெளிநாட்டவர் உட்பட நால்வர் காயம்!!

வெளிநாட்டவருக்குச் சொந்தமான பொத்துவிலில் உள்ள உல்லாசப் பயணிகள் ஹோட்டல் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் மூன்று வெளிநாட்டவர்கள் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிறு இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களே இக்குண்டுத் தாக்குதலை நடத்தினர் எனக் கூறப்படுகிறது.

பொத்துவில் கடற்கரை பகுதியில் உல்லே என்ற இடத்தில் அமைந்துள்ள ஜேர்மனியர் ஒருவருக்குச் சொந்தமான ஹோட்டல் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

படுகாயமுற்ற நான்கு உல்லாசப் பயணிகளும் மொனராகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் மேற்கொண்டவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் பொத்துவில் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. பொலீஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# இராணுவ உளவாளிகள் கொலை அரசாங்கத்துக்கு ஒரு பெரும் புதிர்!

## விசாரணை நடத்த பிரதமர், அமைச்சர் உத்தரவு

கொழும்பு,மே1

இராணுவ உளவுப் பிரிவுக்குத் தகவல் வழங்குவோருக்குப் பாதுகாப்பு வழங்க உத்தரவிடப்பட்டிருக்கையில் அவர்கள் கொலை செய்யப்படுவது அரசுக்குப் பெரும் புதிராக இருந்து வருகிறது. இதனால் இக்கொலைகள் குறித்து விசாரணை நடத்த பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் உத்தரவிட்டிருக்கின்றனர்.

பாதுகாப்பு அமைச்சு செயலாளர், அமைச்சின் பாதுகாப்பு ஆலோசகர், இராணுவத் தளபதி ஆகியோர் கொண்ட ஒரு குழுவைப் பிரதமர் ரணில் இதற்கென நியமித்திருக்கிறார்.

உளவுத்தகவல்கள் வழங்குவோருக்குப் பாதுகாப்பு வழங்குமாறு உத்தரவிட்டிருந்தும் அந்த உத்தரவு பின்பற்றப்படவில்லை என்பது தெகிவளையில் லிங்கசாமி தேவராசா என்னும் உளவாளி கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பின்னர் தெரிய வந்திருக்கிறது.

உளவாளிகள் சம்பந்தப்பட்ட இதுவரையிலான கொலைகள் குறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக மாரப்பன, இராணுவத் தளபதியைப் பணித்திருக்கிறார்.

இதற்கிடையே, கொழும்பில் நடைபெற்ற இக்கொலைகள் குறித்து குற்றப் புலனாய்வுப் பொலீஸ் பிரிவின் இரு விசேட குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளன. (ஐ)

# காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க பி.செயலக மட்டத்தில் குழுக்கள்

## வவுணதீவில் கூடிய உபகுழு கூட்டத்தில் முடிவு

மட்டக்களப்பு,மே1

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான காணிகள் பற்றிய பிரச்சினைகளைத் தீர்க்க பிரதேச செயலக மட்டத்தில் குழுக்கள் நியமிக்கப்படும்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராயும் உபகுழுவின் நேற்றுமுன்தினக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டம் வவுணதீவு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

மண்முனைப்பற்று, காத்தான்குடி, மண்முனை வடக்கு, ஏறாவூர் நகரம், ஏறாவூர்பற்று, கோறளைப் பிரதேசம் ஆகிய பகுதிகளுக்கே இக்குழுக்கள் நியமிக்கப்படும்.

மட்டக்களப்பு மாவட்டக் கண்காணிப்புக் குழுவின் பதில் தலைவர் திருமதி லைலா படாவி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ் தலைமையிலான குழுவில் அரசியல துறைப் பொறுப்பாளர் ஈ.கௌசல்யன், நிதிப் பொறுப்பாளர் எஸ்.சூபி, பொருளாதார பொறுப்பாளர் கே.நிஸாம், பி.றெஜினோல்ட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முஸ்லிம் மக்கள் சார்பில் பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத், எம்.என். மூபீன், எம்.எம்.வை.ஆதம் லெப்பை, எம்.ரி.எம்.பரீத், எம்.எல்.எம்.ஹுசைன், எஸ்.எச்.அபூஹனிபா ஆகியோர் பங்குபற்றினர்.

ஜோசப் பரராஜசிங்கம் எம்.பியும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

மேற்கண்ட குழுக்களுக்கான பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டு மே மாதம 6ஆம் திகதிக்கு முன்னர் மட்டக்களப்பு அரச அதிபருக்கு அறிவிக்கப்படுவர்.

உபகுழுவின் அடுத்த கூட்டம் மே மாதம் 27ஆம் திகதி இதே இடத்தில் நடைபெறும். (ஐ)

# புலிகளின் தலைமையை ஏற்று தமிழினம் ஒன்றுபட்டு நிற்பதை உணர்த்துவோம்!

## மேதினச் செய்தியில் மாவை சேனாதிராஜா

யாழ்ப்பாணம்,மே1

தமிழ்த் தேசம் புலிகளின் தலைமையை ஏற்று ஒன்றுபட்டு நிற்பதை மேதினத்தில் உணர்த்துவோம்.

- மேதினத்தையொட்டி தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா விடுத்துள்ள செய்தியில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அவரது செய்தி வருமாறு:-

"மே" திங்கள் முதலாம் நாள் அமெரிக்க நாட்டில் தொழிலாள வர்க்கம் பெற்ற வெற்றியைக் கொண்டாடுகின்ற நாள். "மே" நாள் விழா ஒரு நூற்றாண்டுக்கு மேலாகக் கொண்டாடப்படுகிறது. தொழிலாள வர்க்கத்தின் வெற்றிவிழா விவசாயிகள் முதல் அனைத்து வர்க்க உழைப்பாளர்களினதும் உரிமைகளுக்குக் குரல் கொடுப்பதற்கும், பெற்ற உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் வலிமை சேர்க்க நடத்தப்படும் போராட்டமாகவும் கருதப்படுகிறது.

சுதந்திரம் பெற்ற நாடுகளில் உழைப்பாளர்களின் உரிமைக்குரலை வெளிப்படுத்தும் அதேவேளை, விடுதலைக்குப் போராடும் மக்களின் நாடுகளில் தங்கள் அரசியல் விடுதலைக்கும் மக்கள் சக்தியை தங்கள் வலிமையை வெளிக்காட்டிடும் போர்குரல் வெளிப்படுத்தப்படுகிறது. இலங்கையில் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டமே மேலோங்கி நிற்கிறது. தமிழ்த் தேசிய இனத்தின் ஆட்சி உரிமை பறிக்கப்பட்டு, ஜனநாயகப் போராட்டங்கள் ஆயுத முனையில் மாறிமாறி வந்த அரசுகளால் அடக்கி ஒடுக்கப்பட்டதனால் கடந்த 20 ஆண்டுகளின் ஆயுதப் போராட்டம் மேலோங்கி நிற்கின்றது. இராணுவ நடவடிக்கைகளினால் தமிழ்த் தேசிய விடுதலைப் போரை அடக்க முடியாத நிலையில் சிங்களப் பேரினவாத அரசுகள் பொருளாதார நிலையிலும் பாரிய தோல்விகளைச் சந்தித்து வந்துள்ளன.

அதனால், தொழிலாளர், உழைப்பாளர் உரிமைப் போராட்டங்கள் ஆயுத முனையில் அடக்கப்பட்டது மட்டுமல்ல, உலகின் உலக மயமாக்கல், சந்தைப் பொருளாதாரம் எனும் புதிய பொருளாதாரக் கொள்கைகளினாலும மக்கள் வாழ்க்கைத் தரமும், உழைக்கும் வர்க்கத்தின் நலன்களும், சுரண்டப்பட்டு வருகின்றது. எனவே, தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலையை மையமாகக் கொண்டுதான் உழைக்கும் மக்களின் உரிமைகளும் நிலைநாட்டப்பட முடியும் என்பது தெளிவாகும்.

இலங்கையில் பேரினவாத அரசுகளின் தமிழ்த் தேசத்திற்கெதிரான இராணுவ நடவடிக்கைகளினால் தமிழ்த் தேசத்தின் பொருளாதாரம் அழிக்கப்பட்டது. மட்டுமல்ல தமிழ்த்தேசிய இன மக்களும் குடியிருப்புக்களும் அழிக்கப்பட்டுள்ளன. தமிழ்த் தேச மக்களின் குடியிருப்பு, வேளாண்மை, கடற் பிரதேசங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களென இராணுவத்தினால் பிரகடனப் படுத்தப்பட்டு ஜனநாயக, மனித அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு இயல்பு வாழ்க்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. லட்சக்கணக்கான தமிழ்மக்களின் அகதி வாழ்க்கையினால் தமிழ்த் தேசியம் அழிக்கப்படுகிறது.

கடந்த ஓராண்டில் போர் நிறுத்தப்பட்டு அரசியல் தீர்வை எட்டுவதற்கும், இயல்பு வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்குமான சர்வதேச, உள்ளூர் முயற்சிகள் சமாதானச் சூழலைத் தோற்றுவித்த பொழுதிலும், பேச்சு மேசையில் சிங்கள அரசுத் தரப்பும் - தமிழ்த் தரப்பும் சமபலம் பேணப்படுவதற்குப் பதிலாக நூற்றுக்கு நூறு வீதம் சிங்கள, பேரினவாத, அரசியல் இலக்குடைய இராணுவம் மேலுங் கட்டியெழுப்பப்படுவதன் மூலம் தமிழ்த தேசிய இனத்தின் ஜனநாயக, ஆயுத பலம் பலவீனப்படுத்தப்படுகிறது.

இதனால், அரசியல் தீர்வு பின் தள்ளப்படுகிறது. தென்னிலங்கையில் சிங்கள மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசித்துக்கொண்டு பொருளாதாரத் துறை, கல்வி, மனிதவள மேம்பாடுகளில் முன்னேறவும் தமிழ்த்தேசிய இனம் அனைத்துத்துறையிலும் வீழ்ச்சியடையவும் சூழ்நிலை ஏற்படுகிறது. மக்களின் தேவைகளும், எதிர்பார்ப்புகளும் மறுக்கப்படுகின்றன.

இச்சூழ்நிலையில் வல்லாண்மை நாடுகளின் வரம்பற்ற தலையீடுகள் தமிழ்த் தேசத்தின் விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தி விடும் ஐயம் ஏற்படுகிறது.

எனவே, தமிழ்த் தேசமக்கள் தமது ஆட்சியுரிமை, தொழிலாளர், விவசாய மற்றும் உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுக்க ஒன்றுபட வேண்டியது முன்னரைவிட அவசியமாகிவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தமிழ்த் தேசத்தின் விடுதலைக்கான அரசியல் தீர்வை எட்டவும் இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்பவும் சர்வதேச அரங்கில் இலங்கை அரசுடன் பேச்சு நடத்த ஆணை வழங்கியதன் அடிப்படையில் இம்மேநாள் விழாவிலும் தமிழ்த் தேசம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒன்றுபட்டு உறுதியுடன் நிற்கிறது என்பதையும் வேண்டுமானால் ஜனநாயக வழிகளிலும் போராட அணி திரண்டுள்ளது என்பதையும் வெளிப்படுத்த அனைவரும் தமிழ்த்தேசிய இனத்தின் கூட்டு மேநாள் அணிவகுப்பில் பங்குகொள்ள வேண்டுமென அழைக்கின்றோம்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சீருடை முத்திரை பெறாதோருக்கு!

யாழ்ப்பாணம்,மே1

2003 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைகள் பெறுவதற்கு விண்ணப்பித்த நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாணவர்களில் இதுவரை சீருடை முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய அடையாள அட்டையுடன் நல்லூர் பிரதேச செயலகத்துக்கு சமூகமளித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

## விவசாய போதனாசிரியர் நியமிக்கக் கோரிக்கை

வலிகாமம் தெற்கு,மே1

வலிகாமம் தென்மேற்கு - சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கென தனியான ஒரு விவசாய போதனாசிரியர் நியமிக்கப்படவேண்டுமென மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் விவசாயத்திணைகளத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வலிகாமம் வடக்கில் அமைந்துள்ள கீரிமலை கமநல கேந்திர நிலயத்துக்கான விவசாய போதனாசிரியரே தற்போது சண்டிலிப்பாய் பிரதேச விவசாய போதனாசிரியராக கடமையாற்றி வருகிறார்.

இரண்டு பிரிவுகளுக்கும் ஒருவரே விவசாய போதனாசிரியராக கடமையாற்றுவதால் இரண்டு பிரதேச விவசாயிகளும் இவரது சேவையை முழுமையாக பெறமுடியாமல் இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (ம-152)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

TaTa 1210 1/2 Body Lorry 42தொடரிலக்கமுடையது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 16, கண்டி வீதி, சாவகச்சேரி. (17261)

வட்டுக்கோட்டை கல்லூரி ஒழுங்கையில் நல்ல நீர்க் கிணற்றுடன் நான்கு பரப்பு வீடு கட்டுவதற்கு ஏற்ற காணிகள் விற்பனைக்குண்டு. மேலும் காரைநகர் வீதி, அரசடியில் 20 பரப்பு நெற் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. (17380)

நல்ல நிலையிலுள்ள டபிள் டோர் பிறிச் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.கிறிஸ்ரி, இல.27/13, நாகராசா லேன், பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (17376)

### வாடகைக்குண்டு

சாவகச்சேரி தேவாலய வீதியைச் சேர்ந்த சட்டத்தரணியும் தற்போது இளைப்பாறிய மேலதிக நீதிவானும், மேலதிக நீதிபதியும் ஆகிய சிவகுரு சுரேந்திரனின் வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. தொடர்பு: திரு.சி. சற்குணநாதன் (B.M.C), 16, கண்டி வீதி, சாவகச்சேரி. (17260)

### மணமகள் தேவை

கனடாவில் பணிபுரியும், 40 வயது, ரேவதி நட்சத்திரம் மணமகனுக்கு படித்த, அழகிய மணமகள் தேவை. சாதகக் குறிப்புடனும் புகைப்படத்துடனும் நேரில் சமூகம் தரவும். குமார், 402/01, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, சுண்டுக்குளி. T.P. 071 383185, 222 2591 (17398)

### வகுப்புகள்

Computer Typing தட்டெழுத்து, சுருக்கெழுத்து, ஆங்கிலம், M.S Office, Page maker, Corel Draw, Photo shop பகல், இரவு வகுப்புகள். தொடர்பு: 37(149), சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (17400)

# வாய்மொழிமூலப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டன

யாழ்ப்பாணம்,மே1

வடக்கு-கிழக்கு மாகாணத் திணைக்கள ஊழியருக்கான சிங்கள மற்றும் ஆங்கிலமொழி வாய்மொழிப் பரீட்சைக்கு தோற்றியவர்களின் பெறுபேறுகள் கடந்த திங்கட்கிழமை வெளியாகின.

வடக்கு-கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் கடந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் நடத்தப்பட்ட இந்த வாய்மொழி பரீட்சையின் பெறுபேறுகள் சம்பந்தப்பட்டவர்களின் திணைக்களம், பெயர், புள்ளி, சுட்டிலக்கம் போன்ற விவரங்களுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சிங்களமொழியில் தோற்றியவர்களில் 65விதமானோர் சித்தியடைந்துள்ளதாகவும் ஆங்கில மொழியில் 55வீதமானோர் சித்தியடைந்துள்ளதாகவும் - மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் வி.பி.பாலசிங்கம் அறிவித்துள்ளார்.

இதேவேளை -

பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் பரீட்சை நடைபெற்ற கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 21ஆம் திகதியிலிருந்து அதன் பெறுவனவுகளை பெற உரித்துடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-185)

### தவறிவிட்டது

திருமதி N.N.ஏபிரகாம் என்பவரின் கையடக்க தொலைபேசி (இல. 0777-434421 - மோட்டோறோலா MIT-2288) இரண்டு வாரங்களுக்கு முன்னர் மானிப்பாய்க்கும் யாழ். நகரப்பகுதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து முடியப்பு பவளம், 46/2, புனித அந்தோனியார் வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தொடர்புகளுக்கு: 075-344938 (சி-27637)

### 'நியாப்' திட்டத்தில் 27 பணிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,மே1

'நியாப்' திட்டத்தின் கீழ் 4மாவட்டங்களில் முதற்கட்டமாக 27வேலைத திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபைகளின் முன்னுரிமைப் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங்களுக்கு நீர்வழங்கல் சேவைக்கான புதிய கட்டுமானப்பணிகள் மேற்கொளளப்படவுள்ளன.

இதனடிப்படையில் முதற்கட்டமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி 27வேலைத் திட்டங்களுக்கும் அரசு 'நியாப்' திட்டத்திற்கு 181.25மில்லியன் ரூபாவை மொத்தமாக ஒதுக்கீடு செய்துள்ளது. (ஒ-185)

## கண்ணீர் அஞ்சலி

முன்னாள் யாழ்.ஆயர்

### மேதகு வ.தியோகுப்பிள்ளை

ஆண்டகை அவர்களின் பேரிழப்பினால் கவலையும் வேதனையும் அடைகின்றோம்.

அருட்திரு.S.N.C. ஞானராஜாவும்
மெல்பொன் தமிழ் கத்தோலிக்க சமூகமும்
ஆஸ்திரேலியா.

(17397)

## 26ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

மண்ணில் 05 - 07 - 1950



விண்ணில் 01 - 05 - 1977

### அமரர் குமரையா தேவராஜன்

காலங்கள் கரைந்து போகலாம்
ஆனால் உங்கள் அன்பு நினைவுகள்
என்றும் எம்முடன் நிலைத்திருக்கும்.

இல.28, றக்கா லேன், சுண்டுக்குளி. (17403) மனைவி, மகன்மார், உறவினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி ஆசீர்வாதம் தனபாக்கியம்

(சிசிலியா பரிமளம்)

போயிட்டி, இளவாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் தனபாக்கியம் அவர்கள் நேற்று (30.04.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோவான்பிள்ளை ஆசீர்வாதத்தின் அன்பு மனைவியும் அருட்சகோதரர் பீற்றர் ஆசீர்வாதம் (திருக்குடும்பக் கன்னியர் மடம், இந்தியா), செல்வமலர் ஐயாத்துரை, புஸ்பராணி பேணாட், தவரட்ணம (டென்மார்க்), புனிதம்(கனடா), கிளிநவரட்ணம், இரத்தினா தேவரட்ணம் (கனடா), ஜெயச்சந்திரன் (கனடா), காலஞ்சென்ற கலாசீலன் மற்றும் அன்ரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஐயாத்துரை (புதுக்குடியிருப்பு), பேணாட் (போயிட்டி), ஞானமலர் (டென்மார்க்), பற்றிமா (கனடா), நவரட்ணம் (இத்தாலி), தேவரட்ணம் (கனடா), அன்பழகி (கனடா), சீலன (ஆனைக்கோட்டை 4ஆம் கட்டை), வேணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் குமார், சுதா, லதா, ராஜன், ரோகனா, காஞ்சனா, டொறினா, ஜீவன், தர்சினி, மரீனஸ், ஜெரீனஸ், ஸ்ரெலினி, நிஷானி, றொசானி, றூபன், றூபினா, றொபின், ரெறோன், றொசான், றியானா, றொசாந்தன், மரினறொசான், சிறான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் றிசானி, சொர்பாசினி, டிசோ,மெரின், ஆகாஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

இன்று (01.05.2003) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு போயிட்டி புனித லூர்துமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் லூர்துமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

போயிட்டி, இளவாலை. (17405)



## கண்ணீர் அஞ்சலி

போயிட்டி, இளவாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

# திருமதி ஆசீர்வாதம் தனபாக்கியம்

(சிசிலியா பரிமளம்)

தோற்றம் 05-08-1928

மறைவு 30-04-2003

அவர்களின் ஆத்மா சாந்தியடைய லூர்து மாதாவை வேண்டுகின்றோம்.

போயிட்டி, இளவாலை. (17404) - குடும்பத்தினர்.

# தமிழர் எதிர்பார்க்கும் இலக்கை எட்ட உலக இந்து மாநாடு உதவ வேண்டும்

சமயம் என்பது ஆறு, நெறி, வழி, தருமம் எனும் பல்வேறு சொற்களால வழங்கப்பட்டு வரினும் அதன் தலையாய நோக்கம் மக்களின் மனவுணர்வுகளைச் சென்ற விடத்தாற் செலவிடாது நீ தொரி இ நன்றின் பால் உய்ப்பதேயாகும்.

அன்றாட வாழ்க்கையில் மக்கள் பல்வகைத் தேவைகள், தடைகள், இன்னல்கள், குறைகள், பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இவற்றைத் துணிவுடன் எதிர்கொள்ளவும், பல்துறையிலும் ஈடுபட்டுள்ளோர் அவற்றில் இருந்து விடுபட்டு - புறவாழ்க்கையை விட்டுப் பிரிந்து - அகத்தளவில - மனத்தளவில் வாழ்கின்ற வாழ்க்கையில் மன அமைதியும் ஒருமையும், நிறைவும் பெறவும் சமயம் அருந்துணையாக இருக்கிறது என்பதில் ஐயம் எள்ளளவுமில்லை.

அறிவியல் ஆய்வுகளாலும், புதிய கண்டுபிடிப்புக்களாலும், பகுத்தறிவு வாதிகளின் எதிர்வாதங்களாலும், ஈர்ப்புண்ட இளைஞர் சமுதாயம் சமய நெறியை ஏற்க மறுத்து எதிர்ப்பதைக் கண்டு அஞ்சி அவர்களைத் துன்புறுத்துவதில் பயனில்லை.

அறிவுத்துறையில் சிறந்து விளங்கிய அறிஞர்களுங்கூட தங்கள் வாழ்வின் முற்பகுதியில் ஆற்றிய அறிவுத துறைப் பணிகளால் தளர்ச்சியும், மனச்சோர்வும் எய்தியபோது அவர்களை மீண்டும் நன்னலம் பெறவும், அமைதியுறவும் சமய அறிஞர்களும் இலக்கியங்களும், அவற்றின் கோட்பாடுகளுமே உதவிபுரிந்தன என்பதை வரலாற்றேட்டின் மூலம் மெய்ப்பித்து இளைஞர்களைப் பரிந்தேற்க வேண்டும்.

நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லென் போரையும் நல்வழிப்படுத்தி உண்மையுணரச் செய்வது சமயமாகும். உலக முழுவதும் பரந்துள்ள இந்துசமயம் உன்னதமான சிறப்புக்களை எய்தி ஓங்க வேண்டுமெனும் உளப்பாங்குடன் எடுக்கப் பெறும் இம் மாநாடு எண்ணிய நற்பயனை எண்ணியவாறே விளைவிக்கவும், மீண்டும் இந்துசமயத்தின் வரலாற்றுக்கு முற்பட்ட பழைமையையும், சீர்மையையும், எளிமையையும், எதிர்புக்களுக்குக் கிடையிலும் ஏற்றம் பெற்றுள்ள அதன் நிறைவையும் விளக்கும் வகையில் ஈழத்தமிழினத்தின் மேன்மையை, அவர்கள் எதிர்பார்க்கும் இலக்கை எய்த இம்மாநாடு வழி செய்ய வேண்டுமென்பதே அனைவினதும் வேணவா!

சைவமும் தமிழும் எங்களின் கண்கள். மண்ணில் நல்ல வண்ணம் வாழ ஆன்மீக வழுமிய அறநெறி இன்றியமையாதது. அதுவும் இளந்தலைமுறையினருக்கு அவசியமானதொன்றாக உணரப்படுகின்றது. "மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம்" என்பார்கள். உண்மைதான். மனதை செம்மைப்படுத்த, ஆரோக்கியமாக்க அறவழி நிற்றல் அவசியம். அதன் பின்னால் எதுவும் எமக்கு இலகுவாகக் கைகூடிவிடும்.

மதுரகவி
காரை. எம்.பி.அருளானந்தன்.
(2ஆம் உலக மாநாட்டு மாநாட்டு ... மாநாட்டுக்குழு ...)

எனவே, நடைபெறும் இரண்டாம் உலக இந்து மாநாடு அங்கு நடைபெறும் நிகழ்வுகள், இடம்பெறும் சிறப்புரைகள், வாசிக்கப்படும் ஆய்வுக் கட்டுரைகள், காண்பிக்கப்படும் கண்காட்சிகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாக நிறைவான பயனை விளைவிக்க கூடிய வகையில், மானுடத்தை நெறிப்படுத்தும் விதத்தில், வெற்றி சேர்க்கும் வகையில் அமைய வேண்டும் என எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவபெருமானின் திருத்தாள்களை இறைஞ்சி நிற்கின்றோம்.

## யானையில் திருமுறை ஊர்வலம்

கொழும்பு,மே1

இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டி யானை மீது வைத்து திருமறை ஊர்வலம் ஒன்றும் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் மாநாட்டு நிகழ்வுகள் இடம்பெறும்போது அதன் ஒரு பகுதியாக இந்த திருமலை ஊர்வலம் இடம்பெறும்.

புதிய கதிரேசன் மண்டபத்தில் இருந்து காலை 7 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட யானையில் திருமுறைகள் வைக்கப்பட்டு இராமகிருஷ்ண மண்டபம் நோக்கி பிரமுகர்கள், பக்தர்கள், பெரியோர்கள் புடைசூழ ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்.

தொடர்ந்து அன்றைய நிகழ்வுகள் இடம்பெறும். (ம)

## இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஜனாதிபதி, பிரதமர் சேர்ந்து ஆரம்பிப்பர்

கொழும்பு,மே1

இந்துசமய விவகார அமைச்சின் ஏற்பாட்டில் நாளை ஆரம்பமாக உள்ள உலக இந்து மாநாட்டின் ஆரம்ப வைபவத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இந்த மாநாட்டுக்கு இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமைதாங்குவார்.

மங்கள விளக்கேற்றல் நிகழ்ச்சியைத் தொடர்ந்து வேதபாராயணம் இசைத்தல், பஞ்சபுராணம் ஓதல், ஆதீன கர்த்தர்களின் ஆசியுரைகள் என்பன இடம்பெறும்.

இந்த இந்து மாநாட்டின் நோக்கம், செயற்பாடுகள் பற்றி மாநாட்டின் செயலாளர் நாயகம் பேராசிரியர் சி.பத்மநாதன் உரையாற்றுவார். அதனைத தொடர்ந்து இந்துசமய விவகார அமைச்சரின் தொடக்கவுரை இடம்பெறும். அதைத் தொடர்ந்து பிரதமரினது சிறப்புரைகள் இடம்பெறும்.

## முதல் நாள் நிகழ்வுகள்

கொழும்பு,மே1

நாளை ஆரம்பமாகவுள்ள இரண்டாவது உலக இந்து மாநாட்டின் முதலாவது நாளில் இடம்பெறவுள்ள நிகழ்வுகள்.

காலை 7 மணிக்கு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. 9.30 மணிக்கு தேசிய கீதம் இசைத்தலும், கொடிகள் ஏற்றுதலும், 9.45 மங்கள விளக்கேற்றுதல், 10.00 மணிக்கு வேதபாராயணம், 10.10 மணிக்கு பஞ்சபுராணம், 10.20 மணிக்கு மாநாட்டு கீதம் இசைக்கப்படும், 10.30 மணிக்கு ஆசியுரைகள், 10.50 மணிக்கு இந்து விவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் வரவேற்புரை, 11.00 மணிக்கு மாநாட்டு செயலாளர் நாயகத்தின் உரை இடம்பெறும்.

11.10 மணிக்கு கௌரவ இந்து விவகார அலுவல்கள் அமைச்சரின் உரை, 11.20 மணிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உரை, 11.35 மணிக்கு ஜனாதிபதியின் உரை, 11.50 மணிக்கு சுகி சிவத்தின் உரை, 12.05 மணிக்கு முத்திரை வெளியீடும் மாநாட்டு மலர் வெளியீடும், 12.15 மணிக்கு இந்தியாவைச் சேர்ந்த நீதியரசர் எஸ்.மோகனின் சிறப்புரை, 12.45 மணிக்கு நிகழ்வுகள் நிறைவுபெறும். (ம)

## உபகுழு நியமிப்பு

கொழும்பில் இடம்பெறவுள்ள உலக இந்து மாநாட்டையொட்டி யாழ்ப்பாணத்திலும் நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள இந்து குருமார் ஒன்றியம் 5 பேர் அங்கம் வகிக்கும் ஒரு உப குழுவை நியமித்துள்ளது.

ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன மண்டபத்தில் பட்டிமன்றம், இசைக்கச்சேரி, கௌரவிப்பு போன்ற சிறப்பு நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை இந்த உபகுழு கவனிக்கும் என்றும் தொவிக்கப்பட்டது.

(ஒ-85)

# சாட்டையடியைக்கூட தாங்கிக்கொள்ளலாம்: மூட்டைப்பூச்சிக் கடியை பொறுக்க முடியாது!

அமெரிக்க பிரதி ராஜாங்கச் செயலருக்கு

ஐயா! ஆர்மிடேஜ் அறிவது!

'நீ நல்ல பிள்ளை, நன்றாகப் பழகுகிறாய், கெட்டிக்காரன், ஒழுங்காய் குடும்பம் நடத்துகின்றாய், உனது குடும்பத்திற்கு நான் உதவவேண்டும் என விரும்புகிறேன், மற்றவர்களும் உனக்கு உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.... ஆனால்.... நீ எனது வீட்டுக்குள் கால் வைக்காதே!'

இப்படிச் சொல்வதை எவராவது நியாயமானது என்று ஏற்றுக்கொள்வார்களா? இல்லையே! ஆனால், நீங்கள் அப்படித்தானே ஐயா சொல்லியிருக்கின்றீர்கள்.

சமாதான முயற்சிகள் நன்றாக நடக்கின்றது என்று பாராட்டியிருக்கிறீர்கள். எல்லாரும் உதவிசெய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளீர்கள்.

ஐயா! சமாதான நடவடிக்கைகள் நன்றாகவே முன்னேற்றகரமாக இருக்கின்றது என்றால் அதற்கு யார் பொறுப்பு? வெறுமனே ஒரு கைதட்டி ஓசை வருமா? இன்றைய சமாதான முன்னேற்றத்திற்காக அதிகம் விட்டுக் கொடுத்தது யார்? புலிகளா, அரசா? போர்நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டதன் பின்னரும் - தங்கள் மீது சமாதானத்தின் விரோதிகள் தாக்குதல் நடத்திய போதும் - பொறுமை காப்பது யார்? அரசா? புலிகளா?.. சமாதானத்தை குழப்ப முனைபவர்கள் எங்கே இருக்கின்றனர். அரசின் பக்கமா, புலிகள் பக்கமா? இதில் யார் அதிகமாக பொறுமை காப்பது, ஒத்துழைப்பது?

எல்லாம் தெரிந்துகொண்டும் தெரியாதது போல் நீங்கள் பேசியிருக்கிறீர்கள். சரி விடுங்கள்.... அரசியல் வல்லரசு என்றால் அப்படித்தான் பேசவேண்டும் என்று சொல்லலாம்.... ஆனால், நீங்கள் செய்துகாட்டியதுதான் 'நெஞ்சில் ஈட்டிபாய்ந்தது போல் இருக்கின்றது. 'வாய்வார்த்தையால் புகழ்ந்து வாளால் வெட்டியதுபோல்' இருக்குதய்யா!

இற்றைக்கு கடந்த 50 வருடங்களாக தமிழ்மக்கள் எதற்காக போராடினார்கள்? ஏன் போராடினார்கள்? ஏன் தங்கள் உயிர்களை தியாகம் செய்தார்கள்? எதற்காக இத்தனை சொத்துக்களையும், உயிரிழப்புகளையும் சகித்துக்கொண்டார்கள்? இந்த 50 வருட சரித்திரத்தின் அவலங்களுக்கான காரணத்தை ஒரு வரியில் சொல்வதென்றால், சமத்துவம், சுயமரியாதை, கௌரவம், மற்றைய மனிதனுக்குச் சமனாக மதிக்கப்படுவது இதுக்குத்தானய்யா.... இதுக்குத்தான்.



இந்த 50 வருட யுத்தத்தின் பின்னர் நாங்கள் ஏன் இன்று பேச்சு மேசைக்குப் போனோம் தெரியுமாய்யா?

இதே சமத்துவம், சுயமரியாதை, கௌரவம், மற்றைய மனிதனுக்குச் சமனாக மதிக்கப்படுவது இவை கொடுக்கப்பட்டதால் தானைய்யா.

எல்லாவற்றையும் எவனிடமிருந்து எதிர்பார்த்தோமோ அவர்களிடமிருந்து பெறமுடிகிறது. ஆனால், நீங்கள்....

'பன்றிக்குத் தவிடு வைக்கப்போனாலும் அது உர் என்கிறது. கழுத்தை அறுக்கப் போனாலும் உர் என்கிறது' என்பது போல் சண்டையிடித்தாலும் பயங்கரவாதி என்கிறீர்கள், சமாதானம் பேசி வந்தாலும் பயங்கரவாதி என்கிறீர்கள். 'சாட்டையடியும் சவுக்கு அடியும் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால், மூட்டைப்பூச்சிகடியும், முணுமுணுப்பும்தான் பொறுக்கமுடியாது.' உங்களை பயங்கரவாதிகள் வன்செயலை என்ற முணுமுணுப்பை பொறுக்கேலாதைய்யா?

சமாதான முயற்சிகளுக்கு வந்தால விடுதலைப் புலிகளின் மீதான தடையை நீக்குவோம் என்றீர்கள். சமாதான முயற்சிகளுக்கு வந்ததன் பின் இன்று என்ன சொல்கிறீர்கள்? வன்செயலை விடவேண்டும் என்கிறீர்கள்... சரி... கடந்த இரு வருடங்களாக வன்செயலையே நாம் விட்டுவிட்டோமே! என்று அவர்கள் சொல்கிறார்கள், நீங்கள் இன்னும் சுசுக்குப்போக்கு சொல்கிறீர்கள்.

ஐயா! இராமகிருஷ்ணரின் கதை ஒன்று.... பாம்பு இருக்கிறதே அது யாரும் தீண்டினால் கடிக்கும். அதனிடம் ஒருவர் அஹிம்சையைப் போதித்தார். அதுவும் அன்றுமுதல் அஹிம்சையைக் கடைப்பிடித்தது. ஆனால், பாருங்கள் சில நாள்களில் பாம்பை மீண்டும் அந்த பெரியவர் பார்த்தபோது அதிர்ந்துபோனார். காரணம் அந்தப் பாம்பு காயங்களுடன் குற்றுயிரும் குலையுயிருமாக இருந்தது. 'ஏன் உனக்கு என்ன நடந்தது?' என்று பெரியவர் கேட்டார். 'நீங்கள் தானே அஹிம்சையைப் போதித்தீர்கள்' என்றது பாம்பு. 'அட உன்னைக் கடிக்க வேண்டாம் என்றுதான் சொன்னேன். சீறக் கூடாது என்றுமா சொன்னேன்' என்றார் பெரியவர்.

## ஆர்மிடேஜுக்கு ஓர் அவசரக் கடிதம்

சமாதானத்தின் மீது உள்ள பற்றைக் காட்டவே புலிகள் விட்டுக்கொடுத்தனர். ஆனால், அதைப் பலவீனமாக நீங்கள் நினைத்தால் அவர்கள் சீறத்தான் செய்வார்கள். அதுதான் அவர்கள் சீறினார்கள்... தாங்கள் ஜப்பான் மாநாட்டில் கலந்துகொள்வது குறித்துப் பரிசீலிப்பதாக... சீறியிருக்கின்றார்கள். இதில் கவனிக்கவேண்டியது, இதற்குக்காரணம் சண்டைக்காரனல்ல.... சாட்சிக்காரன்.

பாம்பு அமைதி காத்தது. உங்களின் நடவடிக்கைகளால் அது இப்போது சீறத்தொடங்கிவிட்டது. அது கடிக்கத் தொடங்கினால் அதற்கான பழி உங்களைத்தான் சேரும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

எங்களுக்காக உங்கள் நாட்டில் நீங்கள் மாநாட்டைக் கூட்டியது சரிதான்.... நிதி வழங்குவதும் சரிதான்.

உங்கள் ஆயுதங்களாலும் உங்கள் ஆயுத நிபுணர்களாலும் தரைமட்டமாக்கப்பட்ட தமிழீழத்தை மீளக் கட்டியெழுப்பவும், உங்கள் ஆலோசனைகளில் நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் அகதிகளாக்கப்பட்ட மக்களின் மீள்குடியமர்வுக்கு உதவ வேண்டியதும், உங்களால் வழங்கப்பட்ட நிதியில் நடத்தப்பட்ட போரில் அநாதைகளான பிள்ளைகளின் மறுவாழ்வுக்கு நிதிவழங்கவேண்டியதும் உங்கள் கடமைதான். அதிலிருந்து நீங்கள் தவறமுடியாது. எனவே, நீங்கள் நிதி வழங்குவது குறித்து கூட்டம் கூடியது சரிதான். நிதி வழங்க மற்ற நாடுகளிடம் கோரிக்கை விடுவதும் சரி.

ஆனால், அதில் பாதிக்கப்பட்டவர்கள் பங்கேற்க மறுத்தமைதான் பிழை. நாயும் நரியும் கூடி நண்டுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து பேசியிருக்கின்றீர்கள். நண்டைப் போய் பயங்கரவாதி என்கிறீர்கள்... அதன் அர்த்தம் புரியாமல் சிண்டைப் பிய்க்கிறோம் நாம்.

ஒருகாலத்தில் நெல்சன் மண்டேலாவையும் பயங்கரவாதி என்றுதான் சொன்னீர்கள். அவரையும் வெள்ளை மாளிகைக்கு வரவிடவில்லை நீங்கள்.

ஆனால், முதல் முதலில் ஆயுதங்களுடன் வெள்ளைமாளிகை வந்தவர்கள் யார் என்று பார்த்தால் - அது பெரிய நகைச்சுவை - உங்களால் வளர்க்கப்பட்ட ஒசாமா பின்லேடன் தான். அன்று அவரை வெள்ளைமாளிகையில் வரவேற்று 'அமெரிக்காவின் மூதாதையரின் தோற்றம்' தெரிகிறது என்று தாடி வளர்த்த பின்லேடனையும் அவரின் ஆப்கானிஸ்தான் சகாக்களையும் பார்த்து அதிபர் ரீகன் புகழ்ந்தார். இன்று...?

காஷ்மீர் பிரிவினைவாதிகள் கடந்த மாதமும் காஷ்மீரில் ஒரு கிராமத்து இந்துக்களை நிரையில் நிற்க வைத்து சுட்டுக்கொன்றனர். அவர்களை இன்னமும் நீங்கள் - இந்தியா கேட்டுக்கொண்டும் - பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கவில்லை. எனவே, உங்கள் வரைவிலக்கணப்படி பயங்கரவாதிகள் என்பவர்கள் யார் என்பது இன்னமும் கேள்விக்குறிதான். உங்கள் நாட்டில் நீங்கள் என்ன சட்டத்தையும் கொண்டு வாருங்கள் பரவாயில்லை. ஆனால், அதற்காக தமிழ் மக்களின் விடுதலை உணர்வுகளை நீங்கள் பலியாக்குவதுதான் கவலைக்குரியது.

'அமைதி நிலை தோன்றுமாயின் அரசியல் தீர்வு ஏற்படுமாயின் உயர் பாதுகாப்பு வலயங்கள் தானாகவே விலகிவிடும்' என்று உங்கள் தூதுவர் அஸ்லி வில்ஸ் தெரிவித்ததை நாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கும் நீங்கள்... 'தீர்வு ஒன்று ஏற்பட்டு சமாதானம் நிலைநிறுத்தப்பட்டால் வன்முறைக்கும் ஆயுதங்களுக்கும் இடமில்லாமல் போகும்' என்று கலாநிதி பாலசிங்கம் நோர்வேயில் வைத்து உங்களுக்குச் சொன்னதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

நாங்கள் சொல்லும் நியாயத்தை நீங்கள் கேட்கத் தயாராயில்லை... நீங்கள் சொல்வதெல்லாவற்றையும் நாங்கள் கேட்கவேண்டும். குட்டக் குட்டக் குனிய வேண்டும் என்பது எந்தவகை நியாயம்?

கேவலம் முகத்தில் முளைக்கும் மயிரே ஆயுதத்தால் மழிக்க மழிக்க வளருது. அந்த மயிரையே ஆயுதத்தால் அடக்க முடியவில்லை விடுதலையுணர்வையா அடக்க முடியும் என்று நினைக்கின்றீர்கள்?

'சமாதானத்திற்கான சரியான வழி எப்போதும் போருக்குத் தயாராக இருப்பதுதான்' என்று சொன்னது உங்கள் முதல் ஜனாதிபதி ஜோர்ஜ் வாஷிங்டன்தான்.

'அண்டை வீட்டுக்காரனோடு நட்புறவோடு இரு. ஆனால், வேலியை எடுத்துவிடாதே' என்பதும் உங்கள் நாட்டுப் பழமொழிதான்.

போர் புரிபவனுக்கு தைரியம், உடல் பலம் போதும். சமாதானம் செய்பவனுக்கு அறிவு மட்டுமல்ல, போர் புரியவும் தெரிந்திருக்கவேண்டும் என்று சொன்னது உங்களால் வளர்த்துவிடப்பட்ட இஸ்ரேல் பிரதமர் சிரோன்தான்.

இதை நீங்களும் மறந்துவிடாதீர்கள். நாங்களும் மறக்கமாட்டோம்.

இப்படிக்கு,
ரட்ணதுரை (கனடா)

# இங்கிலாந்து - நியூஸிலாந்து டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிந்தது

இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

பி.சரவணமுத்து அரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் நியூஸிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட் இழப்பிற்கு 515 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 483 ஓட்டங்களைப் பெற்றது. போட்டியின் இறுதிநாளான நேற்றுமுன்தினம் நியூஸிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது.

இறுதிநாள் ஆட்ட முடிவின் போது 5 விக்கெட் இழப்பிற்கு 161 ஓட்டங்களைப் பெற்றிருந்தது அவ்வணி. ஸ்ரீபன் பிளமிங் ஆட்டமிழக்காமல் 69 ஓட்டங்களைப் பெற்றார்.

முதல் இன்னிங்ஸிலும் ஆட்டமிழக்காமல் 274 ஓட்டங்களைப் பெற்ற அவர்,சிறப்பாட்டக்காரராக தெரிவானார்.

இலங்கை பந்துவீச்சாளர்களில் முரளி 3 விக்கெட்டுகளையும் கௌஷல்ய லொக்குஆரச்சி 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இரண்டாவது டெஸ்ட் போட்டி மே 4 ஆம் திகதி அஸ்கிரிய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. (ஒ)

# கிரிக்கெட் போட்டி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,மே1

அகில இலங்கைப் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 16 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையே நாளை வெள்ளிக்கிழமை முதல் நடத்தப்படவிருந்த கிரிக்கெட் போட்டி மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பாடசாலை கிரிக்கெட் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (ஒ-5)

# விளையாட்டுச் செய்திகள்

யாழ்ப்பாணம்,மே1

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப போட்டியின் இறுதியாட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நாளைய ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி எதிர் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி. (ஒ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே1

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கராட்டி விளையாட்டில் பங்குபற்றும் கழகங்கள் தங்கள் வீரர்கள் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் பெயர் விவரங்களை எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலர் பணிமனையில் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாணம் பிரதேச செயலக விளையாட்டு அதிகாரி எஸ்.திருமாறன் கேட்டுள்ளார். (ஒ)


பாவம், சாபம், பிசாசின்பிடி, தீராத வியாதியிலிருந்தும்
இயேசுக்கிறிஸ்து விடுதலை அளிக்கிறார்

சுவிசேஷ ஆராதனைகள்

மே 1, 2, 3, 4 திகதிகளில்
தினமும் மாலை 4.00 மணிக்கு

இலங்கை பெந்தெகொஸ்தே சபை மண்டபம்
111,கண்டி வீதி,சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

இலவச உட்பிரவேசம்!

யாரவரையும் அன்பாய் அழைக்கின்றோம்.

(சி-27636)


# மரண அறிவித்தல்கள்

## செல்வராஜா கணபதிப்பிள்ளை

*(இளைப்பாறிய வட்டாரக்கல்வி அதிகாரி)*

செல்வராஜா கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (30.04.2003) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் வடலியடைப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் கணபதிப்பிள்ளை - அன்னம் கணபதிப்பிள்ளையின் புதல்வரும் காலஞ்சென்ற மகாதேவா, ரட்ணராசா, வாமதேவன், காலஞ்சென்ற சண்முகநாதன், தில்லைநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சாந்தகுணதேவி, கௌரி ஆகியோரின் மைத்துனரும் கணதீபன், கார்த்திகா, செந்தூரன், அம்பிகை ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.05.2003) வியாழக்கிழமை அஞ்சலிக்காக கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பி.ப. 1.00 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

*"தேவிவாசம்"*
*உடுப்பிட்டி.* (சி-27649)

தகவல்:
தி.கணபதிப்பிள்ளை (சகோதரர்)

## விசுவநாதர் பராக்கிரமசிங்கம்

*(முன்னாள் ஆளணி முகாமையாளர், இ.போ.ச.)*

மாதகலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட விசுவநாதர் பராக்கிரமசிங்கம் நேற்று (30.04.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவநாதர் சிதம்பரம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் சிற்றம்பலம், இராசம்மா தம்பதிகளின் மருமகனும் லிங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், கேமவண்ணன் (சுவிஸ்), சதீஸ்வரன் (கூட்டுறவுப் பரிசோதகர், முல்லைத்தீவு), உசாவதனா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தெய்வானை, தங்கம், வள்ளியம்மை (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற பாலச்சந்திரன், திருஞானம், பரஞ்சோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.

*வில்வளை.*
*மாதகல்.* (17417)

தகவல்:
சதீஸ்வரன் (மகன்).

## திருமதி கந்தசாமி தவமணி

**(குயிலம்மா)**

பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி தவமணி 27.04.2003 ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் கந்தசாமியின் (வதனி லொறி உரிமையாளர்) அன்பு மனைவியும் மதிவதனி (பிரான்ஸ்), பிரஷானந்தசிவம் (சுவிஸ்), விவேகானந்தசிவம் (பிரான்ஸ்), பங்கயவதனி (லண்டன்), தயாவதனி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கி.கந்தசாமி (நடராசா), கி.தம்பிஐயா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.05.2003 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

*பத்தமேனி,*
*அச்சுவேலி.* (17415)

தகவல்:
திரு.திருமதி அருந்தவராசா மலர்.

## திருமதி ஆறுமுகசாமி சுந்தரவல்லி

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை ஆறுமுகசாமியின் அன்பு மனைவி சுந்தரவல்லி நேற்று (30.04.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் (பிரசித்த நொத்தாரிசு), கதிர்காமலிங்கம், அமிர்தவல்லி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கணபதிப்பிள்ளை மகேஸ்வரி, திருநாவுக்கரசு (நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை), இராஜேஸ்வரி, நாகலிங்கம் (கூட்டுறவுப் பரிசோதகர், முல்லைத்தீவு), குமாரவேல் (ஆசிரியர், சென்.பெனடிக் கல்லூரி, கொட்டாஞ்சேனை) ஆகியோரின் அன்புத் தாயாரும் கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய கிராமசேவையாளர்), நந்தாவதி (ஆசிரியை, சிவகுரு வித்தியாசாலை), இராஜசுலோசனா (ஆசிரியை, விவேகானந்தா கல்லூரி, கொட்டாஞ்சேனை) ஆகியோரின் அன்பு மாமியாரும் தாரிணி, தீபன், கலாஞ்சலி, சரண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2003) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஊறணி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தென்னியம்மை,*
*வல்வெட்டித்துறை.* (சி-27642)

தகவல்:
ஆ.நாகலிங்கம்
(கூட்டுறவுப் பரிசோதகர்)

# 45 ஆம் நாள் நிறைவு நினைவு ஆதங்கமும் அழைப்பும்



செல்வன் குமரகுருபரசுந்தரம்

## யநோஷன்

(யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி தரம் - 7 மாணவனும் யா/ இந்து ஆரம்ப பாடசாலை தரம் 5A - 2001 பழைய மாணவனும்)

**தோற்றம்**
**12.10.1991**

**மறைவு**
**18.03.2003**

குஞ்சு நீயென கூடி மகிழ்ந்து - எம்
நெஞ்சில் தவழ்ந்து, நேரில் முகம் கொண்டு; தொந்தி
அரவணைத்து, ஆக்கங்கள் பல கூறி, - எம்முடன்
வந்து நீ ஒன்றாய் வாழ்ந்து, சென்றிட்டாய் - யநோஷா
★நினைக்க முடியவில்லை நீ நெடுந்தூரம் சென்றதற்கு!

கதறுகிறார் உன் அன்னை காலன் கவர்ந்ததற்கு,
கண்ணே கண் மணியே,
ஆனிரைகள் பால் சொரிய,
ஆதவன் வருகையினால்
கமலம் முகம்மலர
காலன் கவர்ந்தானே - யநோஷா
★நினைக்க முடியவில்லை நீ நெடுந்தூரம் சென்றதற்கு!

பின்வந்த உன் தம்பி வாடுகின்றான் - ஐயையோ
வருவாயோ என்றேங்குகின்றான் - பதினாறுதிசைகளிலும்
உறவுகள் பதைபதைக்க ஊரார்கள் சுமந்து சென்ற
கண்கண்ட காட்சிதனை கூறுகின்றான் தன் வாயால் - யநோஷா
★நினைக்க முடியவில்லை நீ நெடுந்தூரம் சென்றதற்கு!

முற்றத்தில் விளையாடும் முன்வீட்டு ரிசி கோபன்
பின்னின்று பார்த்து சிந்தை செய்யும் பெரும் தோழன்
வரவு தன்னைப் பார்த்து வாசல் வரை வந்துவிட்டான்
வாடிய மலர்போல வதனம் மாறுதையோ - யநோஷா
★நினைக்க முடியவில்லை நீ நெடுந்தூரம் சென்றதற்கு!

18.03.2003 இல் அகால மரணமடைந்த செல்வன் குமரகுருபரசுந்தரம் - யநோஷன் அவர்களின் 45 ஆம் நாள் நிறைவு நினைவாக எமது இல்லத்தில் இன்று (01.05.2003) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு யா/ சென். ஜோன்ஸ் கல்லூரி - தரம் 7 மாணவர்களையும் மற்றும் கல்லூரிச் சமூகத்தினரையும், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை தரம் 5 மாணவர்களையும் (2001) மற்றும் கல்லூரி சமூகத்தினரையும், வ.பி.போ.சபை - சாலை, நிர்வாக, தொழிலாளர்கள் (சாரதி, காப்பாளர், பொறியியலாளர்) தலைமைக் காரியாலய முகாமை நிர்வாக உத்தியோகத்தர்கள மற்றும் எமது அயலவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வே.குமரகுருபரசுந்தரம்,*
*இல. 42, பிரப்பங்குளம் வீதி,*
*கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.*

-குடும்பத்தினர்.

(17401)

# திணைக்கள ஊழியர்கள் குறித்த விவரங்கள் திரப்படுகின்றன

யாழ்ப்பாணம்,மே1

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அரச திணைக்களங்களில் பணியாற்றும் அலுவலர்கள் குறித்த முழுவிவரங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும்-

வடக்கு-கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திருமதி கமலா சிவசிதம்பரம் திணைக்களத் தலைவர்களைக் கேட்டுள்ளார்.

சகல அரச திணைக்களங்களில் பணியாற்றும் அலுவலர் மற்றும் ஊழியர்களின் மனிதவளம் தொடர்பான விவரங்கள் தவறாது குறிப்பிடப்பட வேண்டும் என்றும்-ஒவ்வொரு ஊழியருக்குமான வெள்ளை-இளமஞ்சள் நிறங்களினாலான இருபடிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்-

அதனை உடன்நிரப்பி திணைக்களத் தலைவர்- செயலாளர்கள் உறுதிப்படுத்தி-

கணனி மென் தகட்டிலும் பதிவு செய்து அனுப்பி வைக்குமாறும்- இது தொடர்பான கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தரவுத் திரட்டில் எந்தவோர் ஊழியரும் தவறவிடப்பட்டால் அதற்கான முழுபொறுப்பும் அத்திணைக்களத்தைச் சார்ந்த தலைவர்-செயலாளர்களையே சாரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-185)


## தேவை

பெயின்ற் விற்பனை, பாதணி விற்பனை மற்றும் சினிமா தொழில் என்பவற்றில் அனுபவமுள்ள ஆண் ஊழியர்கள் தேவை.

தொடர்பு :
நாகம்ஸ் பாட்டா,
சுன்னாகம். (17413)


# போர் ஓய்ந்துள்ளதே தவிர தேவைகள் நிறைவேறவில்லை

**யாழ்.** குடாநாட்டில் மருத்துவ சேவையில் ஈடுபட்டுள்ள பிரான்ஸ் எம்எஸ்எவ்மருத்துவக் குழு எதிர்வரும ஜூன் மாதத்துடன் தமது சேவையை முடித்துக்கொண்டு வெளியேறவுள்ளது.

இதனால், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை போன்றவை மருத்துவ சேவையில் பல நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் காணப்படும் வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறையினை கடந்த பல வருடங்களாக பிரான்ஸ் எம். எஸ்.எவ். நிறுவன மருத்துவ குழுவே ஈடுசெய்து வந்துள்ளது.

தற்போது இவ்வைத்தியசாலையில் பிரான்ஸ் எம்.எஸ்.எவ். மருத்துவக் குழுவை சேர்ந்த டாக்டர் அமில்கா சத்திரசிகிச்சை நிபுணராகவும் டாக்டர் செல்வி மகிக்கோ மகப்பேற்று நிபுணராகவும் டாக்டர் பியர் மயக்க மருந்து நிபுணராகவும் கடமையாற்றி வருகின்றார்கள். எம்.எஸ்.எவ். நிறுவனம் காலத்துக்குக்காலம் இச்சேவை புரிவதற்கு வைத்திய நிபுணர்களை வைத்தியசாலைக்கு வழங்கி வந்துள்ளது.

இம்மருத்துவக் குழுவினர் வெளியேறும் பட்சத்தில் சத்திரசிகிச்சை உட்பட பல நிபுணத்துவசேவைகள் பாதிக்கப்படலாம் என அஞ்சப்படுகிறது.

கடந்த காலங்களில எம்.எஸ்.எவ். மருத்துவக் குழுவினர் நோயாளர்களுக்கு வைத்திய சேவையினை அளிப்பதுடன் மட்டும் நிற்காது மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவும் காலங்களில் அவற்றைத் தமது நிறுவனம் ஊடாகப் பெற்றுக்கொடுத்தும், வைத்தியசாலை கட்டடங்கள் உட்பட பல்வேறு அபிவிருத்தி வேலைகளையும் மேற்கொண்டு வைத்தியசாலையின் அபிவிருத்தியிலும் சேவை விஸ்தரிப்பிலும் உதவி வந்துள்ளார்கள். வைத்தியசாலைக் கழிவுப் பொருள்கள் சூழலுக்கு எவ்வித பாதிப்பையும ஏற்படுத்தாது, பத்திரமாக அதனை அழித்துவிடும் வகையில், நமது நாட்டின் நிபுணத்துவ சேவையினைப் பெற்று, எமது பிரதேசத்தில் கிடைக்கும் மலிவான பொருள்களின் உதவியுடன் 'எரியூட்டியினை' அமைத்துக் கொடுத்தும் உள்ளார்கள்.

பிரான்ஸ் எம்.எஸ்.எவ். நிறுவனம் 1987ஆம் ஆண்டு தமது சேவையினை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஆரம்பித்தது. அக்காலப் பகுதியில் எமது நாட்டில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவம் வடமராட்சியில் தேடுதல், சுற்றிவளைப்புக்களின் போது பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்களைக் காயப்படுத்திய வேளைகளிலும் கொன்ற வேளைகளிலும் காயப்பட்டவர்களையும் இறந்தவர்களையும் அப்போது இங்கு கடமையாற்றிய இந்த மருத்துவக்குழுவைச் சேர்ந்த டாக்டர் செல்வி ஐகுலின் துணிச்சலுடன் துப்பாக்கி வெட்டுக்கள் கேட்ட பகுதிக்கு தமது வாகனத்துடன் சென்று அவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டுவந்து சேர்த்த சம்பவங்கள் இன்றும் நன்றியுடன் நினைவுகூர வேண்டியவை.

நாட்டின் தற்போது போர் ஓய்ந்திருப்பதையடுத்து யுத்தக்காலங்களில் மனிதாபிமான பணியினை வடக்குக் கிழக்கில் மேற்கொள்ள வந்த பல வெளிநாட்டு நிறுவனங்கள், தமது பணியினை நாளாந்தம் குறைத்துக் கொண்டு செல்வதையும், நாட்டை விட்டு வெளியேறுவதற்கு ஆயத்தங்களை மேற்கொண்டு வருவதையும் அறியக்கூடியதாக உள்ளது. போர் ஓய்ந்துள்ளதே தவிர, மக்களுடைய தேவைகள் நிறைவேற்றப்பட்டு, அவர்களுடைய வாழ்வு சகஜ நிலைக்குத திரும்பியதாகத் தெரியவில்லை. சுகாதார சேவையினைப் பொறுத்தவரை தட்டுப்பாடுகள், பற்றாக்குறைகள் தொடர்கதையாகத்தான் இருக்கின்றன.

**செய்திக் கட்டுரை: வடமராட்சி கிழக்கு செய்தியாளர்**

இவை நாளையோ நாளை மறுதினமோ நிவர்த்தி செய்யக்கூடியவையல்ல. எமது மண்ணில் பிறந்து இங்கு கல்விகற்று வைத்தியர்களாக வந்தவர்கள் மண்ணையும், மக்களையும் மறந்து ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் வெளிநாட்டு வைத்தியர்களுடைய தயவில் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டியநிலை மக்களுக்கு ஏற்படுகின்றது.

இந்நிலையில், வைத்திய சேவை புரிகின்ற வெளிநாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்கள் தமது சேவைகளைக் குறைத்துக் கொள்வதினாலேயோ, நிறுத்திக் கொள்வதினாலேயோ பாதிப்பைச் சந்திக்கப் போகின்றவர்கள் அப்பாவிப் பொது மக்கள தான்.

வன்னிப் பிரதேசத்தில் மருத்துவ சேவையில் ஈடுபட்டுள்ள கொலண்ட் நாட்டு எம்.எஸ்.எவ்.நிறுவனம் 2004 ஆம் ஆண்டு வரை அங்கு தங்கியிருக்க முடிவு செய்துள்ளது. அவர்களாவது விட்டுச் செல்கின்றவர்களது குறையினை சிறிது காலமாவது நிறைவு செய்வார்களா என எதிர்பார்க்கப் படுகின்றது. ★


## அரியாலை சனசமூக நிலையம்
## 54 ஆவது ஆண்டு நிறைவு விழா–2003

ஆண்டு நிறைவு விழாவையொட்டி வடமாகாண ரீதியிலான கீழ்வரும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. பதிவு செய்யப்பட்ட கழகங்கள், சனசமூக நிலையங்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

1)துடுப்பாட்டம் – 06போட்டியாளர்கள் கொண்ட குழு – 06பந்துப் பரிமாற்றங்கள் (மென்பந்து)

2)கரபந்தாட்டம் – செற்அப்

3)வலைப்பந்தாட்டம்

விண்ணப்பக் கட்டணம் ரூபா50/-

விண்ணப்ப இறுதித் திகதி 10-05-2003

**விண்ணப்ப முகவரி:-**

திரு.எஸ்.கே.சண்முகலிங்கம்
57/1புகையிரத நிலைய வீதி,
புங்கன்குளம்,
அரியாலை.

திரு.மு.ஐ.சங்கர்
சதோச (வின்ஸர் தியேட்டர்),
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மெலோடியஸ் மியூசிக் சென்ரர்
224, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சீ-27639)



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 469 |
| திகதி | 29.04.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
**4890382-4904238**

**வெற்றி இலக்கங்கள்** 04 05 42 43




**லக்கினம்** மீனம்

**ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்பட்டுள்ளது.**

**இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 295,106 | 10 | 2,951,060 |
| 2 இலக்கங்கள் | 27,198 | 20 | 543,960 |
| 1 இல + லக்கினம் | 27,067 | 30 | 812,010 |
| 2 இல + லக்கினம் | 2,375 | 100 | 237,500 |
| 3 இலக்கங்கள் | 739 | 500 | 369,500 |
| 3 இல + லக்கினம் | 50 | 5,000 | 250,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 1,000,000 | 1,000,000 |
| மொத்தம் | 352,539 | - | 6,464,030 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,464,030/-

தொடர் இல. 5886373க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 மே 02ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**4897668-2-36**
**4899302-1-14**
**4895440-9-60**
**4897078-6-85**
**4895226-0-41**



## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை
## அறிவித்தல்

**மேதின ஊர்வலத்தில் கூட்டுறவாளர்கள் ஒன்றிணைந்து பங்கேற்கும் வகையில் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்தவர்களும் இன்று (01.05.2003) வியாழக்கிழமை பி.ப.1.30 மணிக்கு நல்லூர் சிவன்கோவில் முன்றிலில் ஒன்றுகூடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

(C/27641)

மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை.


## நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

**முதலாம் ஆண்டு**



**அமரர்**
**தம்பிப்பிள்ளை வைகுந்தர்**
(உரிமையாளர், ஸ்ரீகிருஷ்ணா சைக்கிள் வேக்ஸ்)

**பத்தாம் ஆண்டு**



**அமரர்**
**கந்தையா தம்பிப்பிள்ளை (J.P)**
(முன்னாள் கிராமசபைத் தலைவர் கைதடி, நாவற்குழி)

அன்போடும் பண்போடும் ஆதரவு மொழி பேசி
என்றுமே இன்சொல்லால் எங்களை மகிழ்வித்து
இன்ப வாழ்விலே தீபமாய் ஒளிவீசிப் பிரகாசித்த
அன்புள்ளங்கள் சாந்திபெற ஆண்டவனை வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இவர்களின் ஞாபகார்த்த அஞ்சலி நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் இன்று (01.05.2003) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்றது. இந்நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கைதடி மத்தி,*
*கைதடி.*

**மனைவி, மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.**

# உரிமைகளை வென்றெடுத்த உலகத் தொழிலாளர் தினம்

இன்று மே முதலாம் திகதி; உலகத் தொழிலாளர் தினம்.

அடக்கி ஒடுக்கப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட உலகத் தொழிலாளர்கள் தமது வீரம் செறிந்த போராட்டத்தின் மூலம் தமது உரிமைகளை வென்றெடுத்ததை நினைவுகூரும் தினம்.

இன்றும் உலகத் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராக நிகழ்த்தப்படும் அட்டூழியங்களுக்கும், அடக்குமுறைகளுக்கும் எதிராக உலகத் தொழிலாளர் சக்தியை உலகறியச் செய்வதற்காக ஆண்டுதோறும் மே மாதம் முதல் நாள் உலகத் தொழிலாளர் தினமாக உலகம் முழுவதுமே கொண்டாடப்படுகின்றது.

உலகின் முதுகெலும்பாக - உந்து சக்தியாக - விளங்கும் தொழிலாளர்களின் உரிமைகள் நசுக்கப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில் அதற்கெதிராகப் போராடி தமது உரிமைகளை பெறுவதற்கு உயிர்த்தியாகம் செய்தவர்கள் பலர். அவர்களது இரத்தம் சிந்திய போராட்டங்கள மூலமும் உயிர்த்தியாகம் மூலமும் வென்றெடுக்கப்பட்டவையே இன்றைய தொழிலாளர் உரிமைகள்.

அன்று தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தூக்கிலிடப்பட்டார்கள்; சுட்டுக்கொல்லப்பட்டார்கள்; அல்லது சிறையில் அடைக்கப்பட்டனர். ஆயினும், எதற்கும் அஞ்சாமல் உறுதியுடனும் திரத்துடனும் நின்று போராடிய பாட்டாளி வர்க்கம், தனது உரிமைகளை வென்றெடுத்தது.

அமெரிக்காவின் பில்டெல்பியா நகரத் தொழிலாளர்கள் 1806ஆம் ஆண்டு முதன் முதலில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர். உலகில் முதல் தொழிற்சங்க இயக்கமும், தொழிற்சங்க நடவடிக்கையும் இதுவே. ஆனால், இந்தப் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தியவர்களுக்கு எதிராக அன்றைய ஆளும் வர்க்கம் சதி முயற்சிகளில் ஈடுபட்டார்கள் என்று குற்றஞ்சாட்டி வழக்குத் தாக்கல் செய்தது. இந்தத் தொழிற்சங்க இயக்கத்தின் பின்னரே இங்கிலாந்தில் தொழிற்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தொடர்ந்து உலக நாடுகள் பலவற்றில் தொழிற்சங்கங்கள் உருவாகின.

1827ஆம் ஆண்டு பில்டெல்பியா நகரக் கட்டடத் தொழிலாளர்கள் பத்து மணி நேரம் மட்டும் வேலை என்ற கோரிக்கையை முன்வைத்தனர். தொடர்ந்து 1834ஆம் ஆண்டு இதே கோரிக்கையை முன்வைத்து நியூயோர்க் நகரில் ரொட்டித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அவர்கள் ஒருநாளில் 18-20 மணி நேரம் கட்டாயவேலை செய்ய வேண்டியிருந்தது. பல தடவை போராடியதன் பின்னர் அவர்களது போராட்டத்தின் பயனாக 1937ஆம் ஆண்டு வேலை நேரம் 10 மணித்தியாலமாகக் குறைக்கப்பட்டது. தொழிலாளர்கள் தமது முதற் போராட்டத்தில் வெற்றி பெற்றனர். தொழிலாளர் சக்தியின் முன் முதலாளிகள் மண்டியிட வேண்டி வந்தது. உலகம் தனது பாதையில் ஒரு வரலாற்றுத் திருப்பத்தைக் கண்டது.

இந்த வெற்றியைத் தொடர்ந்து பல நாட்டுத் தொழிலாளர்களும் ஒன்றிணைந்து தமது வேலை நேரம் ஒரு நாளுக்கு எட்டுமணிநேரமாகக் குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். மேல்நாடுகளில் இக்காலப் பகுதியில் இடம்பெற்ற கைத்தொழில் புரட்சி இதற்குத் துணையாக அமைந்தது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்காவில் எட்டுமணிநேர வேலை என்ற கோரிக்கை பெரும் இயக்கமாக மாறிற்று. மேதினம் தோன்றுவதற்கு அடிப்படையான காரணமாகவும் இது அமைந்தது.

1866ஆம் ஆண்டு தேசிய தொழிற்சங்கத்தின் முதல் மாநாடு நடைபெற்றது. அதில் தொழிலாளர் பிரதிநிதிகளால் மிக முக்கிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


"அமெரிக்கா முழுவதும் எட்டுமணி நேர வேலைநாள் என்பது சட்டமாக்கப்பட வேண்டும். அதன் மூலமே முதலாளித்துவ அடிமைத் தனத்தில் இருந்து இந்த நாட்டின் உழைப்பை விடுவிக்க முடியும். இந்த மாபெரும் பலனை அடைய நாம் எமது பலம் அனைத்தையும் ஒன்று சேர்த்து போராடுவோம்" என்று அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது.

அதே ஆண்டு செப்ரெம்பர் மாதம ஜெனீவாவில் கூடிய சர்வதேச காங்கிரஸ் 'வேலை நாளுக்கு சட்டபூர்வமான அளவு முதல் தேவையாகும். அது இல்லையெனின் தொழிலாளர் வர்க்கத்தின் முன்னேற்றமோ, விடுதலைக்கான முயற்சியோ முழுமையடையமாட்டாது. ஆகவே, வேலை நாளின் சட்ட ரீதியான அளவு எட்டு மணிநேரமாக இருக்க வேண்டும் என்று இந்த மாநாடு முன்மொழிகின்றது' என்று தனது தீர்மானத்தை விரிவாக விளக்கிக் கூறியது.

இதேவேளை -

எட்டுமணிநேர இயக்கம் பற்றி கார்ல்மார்க்ஸ் 1867ஆம் ஆண்டு எழுதிய தனது 'மூலதனம்' என்ற நூலின் "அமெரிக்க ஐக்கிய குடியரசின் ஒரு பகுதியை அடிமைத்தனம் சூழ்ந்திருக்கும் வரை எல்லாச் சுயேச்சையான தொழிலாளர் இயக்கமும் முடங்கிக் கிடந்தன. தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் கறுப்பு இனம் என முத்திரை இடப்பட்டிருக்கும் வரையும் வெள்ளையினத் தொழிலாளர்கள் விடுதலை அடைந்துவிட முடியாது. ஆனால், அடிமைத்தனத்தின் அழிவிலிருந்துதான் புதிய உணர்வுகள் பிறந்தன" என்று எழுதியிருந்தார்.

1866ஆம் ஆண்டு மேமாதம் முதல் நாள் அமெரிக்காவில் எட்டு மணிநேர வேலை இயக்கப் போராட்டம் உச்சகட்டத்தை அடைந்தது. அன்று நடைபெற்ற சம்பவங்கள் அமெரிக்கத் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்ட வரலாற்றில் பெரும் திருப்பு முனையாக அமைந்தன. அன்று ஊர்வலம் சென்ற தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டனர். அதை எதிர்த்துத் தொழிலாளர்கள் 3ஆம், 4ஆம் திகதிகளில் தொடர்ந்து போராட்டம் நடத்தினர்.




மே 3ஆம் திகதி நடைபெற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை பொலீஸார் காட்டுமிராண்டித்தனமாக அடக்கினர். அதனை எதிர்த்து அடுத்த நாள 'வைக்கோல் சந்தைச் சதுக்கத்தில்' ஆர்ப்பாட்டம் நடந்தது. பொலீஸார் தாககுதல் நடத்தத் தொடங்கியதையடுத்து கூட்டம் சிதறியது. கூட்டத்தில் எறியப்பட்ட ஒரு குண்டு இராணுவ அதிகாரி ஒருவரின் உயிரைப் பலி கொண்டது. இதனால் ஆத்திரமடைந்த பொலீஸார் தாக்கத் தொடங்கினர். அங்கு இடம் பெற்ற மோதல்களில் 7 பொலீஸாரும நான்கு தொழிலாளர்களும் உயிரிழந்தனர். போராட்டத்துக்கு முன்னின்ற தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களில் முக்கியமான சிலர் பின்னர் தூக்கிலிடப்பட்டனர்.

இதனை விடவும் -

பென்சில்வேனியா மாநிலத்தில 1875ஆம் ஆண்டு போராட்டத்தில் ஈடுபட்ட சுரங்கத் தொழிலாளர்கள் சுரங்க முதலாளிகளால் தூக்கிலிடப்பட்டனர்.

1912ஆம் ஆண்டு ஏப்ரலில் சைபீரியாவில் வேலைநிறுத்தம் செய்த தங்கச் சுரங்கத் தொழிலாளர்கள் ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்யப்பட்டனர்.

பால்டிமோரில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மீது கண்மூடித்தனமான கொடூரத் தாக்குதல் நடத்தப்பட்டு போராட்டம் அடக்கப்பட்டது.

பொஸ்டன் நகரில் மேதினத்தன்று நடைபெற்ற ஊர்வலத்தினை முறியடிக்க ஊர்வலத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. பலர் உயிரிழந்தனர்; மேலும் பலர் காயமடைந்தனர்.

இவை அனைத்தும் உலகநாடுகளில் மேதினத்தன்று இடம்பெற்ற தொழிலாளர் போராட்டங்களை நசுக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட பயங்கர நடவடிக்கைகள். இவற்றைவிட மேலும் பல நிகழ்வுகள் மேதின வரலாற்றில் மறக்கமுடியாத அத்தியாயங்களாகப் பதியப்பட்டுள்ளன.

மாற்றியமைக்கப்பட்ட சர்வதேச காங் கிரஸின் இரண்டாவது மாநாடு 1889 ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெற்றது. இம்மாநாட்டில் வைத்து முதன் முதலாக மே தினம் பிரகடனப் படுத்தப்பட்டது.

"மே முதல்நாள் என்பது உலகத் தொழிலாளர்கள் தமது அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்களின் கீழ் முக்கிய அரசியல் கோரிக்கையாக எட்டு மணி நேர வேலைநாளுக்கு குரல் கொடுக்க வேண்டிய தினம்" என்று மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

அதற்கு முன்னர் 1884ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி சிக்காகோவில் 'அமெரிக்க தொழிலாளர் சம்மேளனம்' என்ற அமைப்பு எடுத்த முடிவே பாரீஸ் தீர்மானத்துக்கு முன்னோடியாக அமைந்தது.

1890ஆம் ஆண்டு பல ஐரோப்பிய நாடுகளில் மேதினம் கொண்டாடப்பட்டது. அதிகார வர்க்கத்தின் எச்சரிக்கையையும் ஒழுங்கு முறைகளையும் மீறி தொழிலாளர்கள் மேதினத்தை கொண்டாடினர். அவற்றில் அமெரிக்காவின் சிக்காகோவிலும் நியூயோர்க்கிலும் நடந்த ஆர்ப்பாட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. இன்று உலகம் முழுதும் மே முதல் நாள் உலகத் தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. தொழிலாளர்களின் உரிமைக்காக குரல் எழுப்பும் நாளாக விடுதலைக்குப் போராடும் மக்கள் அடக்குமுறைக்கு எதிராகக் குரல் எழுப்பும் நாளாகவும் மேதினம் அமைந்துள்ளது. இலங்கை உட்பட தெற்காசிய நாடுகளில் மேதினம் தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்ற போதும் அவை அரசியல் கட்சிகளாலேயே பெரிதும் நடத்தப்பட்டு வருகின்றன. தொழிலாளர் உரிமைகளைப் பற்றியும் அவர்களது விடுதலை பற்றியும் மேதினக் கூட்ட மேடைகளில வாய்கிழியக் கத்துவதுடன், அரசியல் வாதிகளின் பணி நிறைவுபெற்று விடுகின்றது. தொழிலாளர்களின் உரிமைகளை மதிப்பது மற்றும் அவர்களுக்கான உரிமைகளை வழங்குவது போன்றவற்றில் மேல்நாடுகளை விட மூன்றாம் உலக நாடுகள் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இருக்கின்றன.

இந்த நாடுகளின் தொழிலாளர்கள் தமது சிறு உரிமைகளைக் கூட பெரும் போராட்டத்தின் பின்னரே பெற்றுக் கொள்கின்றனர். சிலவேளைகளில் இப்போராட்டங்களின் போது வெறும் உறுதிமொழிகள் மட்டும் வழங்கப்பட்டு தொழிலாளர்கள் ஏமாற்றப்படுகின்றனர்.


அரசியல்வாதிகளின் பிடியிலிருந்து தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் விடுவிக்கப்பட்டு தொழிற்சங்கங்கள் முற்றுமுழுதாக தொழிலாளர்களுக்காக செயலாற்ற முன்வரும் வரை இந்த நாடுகளில் தொழிலாளர் உரிமைகள் மதிக்கப்படப்போவதில்லை.

இந்த நாடுகளில் நடைபெறும் மேதினக் கூட்டங்கள் தமது அரசியல் செல்வாக்கையும் பலத்தையும் உலகுக்குக் காட்ட அரசியல் கட்சிகளால் நடத்தப்படுகின்றனவே ஒழிய தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும் நலன்களுக்காகவும் நடத்தப்படுவதில்லை.

**- அன்ரன் -**

இந்நிலை மாற்றமடைந்து தொழிலாளர்கள் தமது உரிமைகளைப் பெறவும் அவர்களது நலன்கள் பேணப்படவும் வழிசமைக்கப்பட வேண்டும் தொழிலாளர் சக்தி மாபெரும் சக்தி என்பது உணரவைக்கப்பட வேண்டும்.

தொழிலாளர் தினமான இன்று இன, மொழி, மத,பேதமற்று ஒன்றாக இணைந்து தொடர்ந்து போராடுவதன் மூலமே தொழிலாளர்கள் தமது உரிமைகளையும் சுதந்திரத்தையும் வென்றெடுக்க முடியும் என்பதனையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ★




## தெல்லிப்பழையில் இரண்டு நாள்கள் புற்றுநோய் சிகிச்சை வழங்கப்படும்

யாழ்ப்பாணம்,மே1

தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், 7ஆம் திகதி புதன்கிழமையும் புற்றுநோய் சிகிச்சை வழங்கப்பட உள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் க.கனகரட்ணம் அறிவித்துள்ளார். கொழும்பிலிருந்து வருகை தரவுள்ள புற்றுநோய் வைத்திய நிபுணர் இத்தினங்களில் சிகிச்சைகளை மேற்கொள்வார் என்றும் -

சிகிச்சை நிலையத்திலிருந்து கிளினிக் கொப்பிகளை எடுத்துச் சென்ற நோயாளிகள் அவற்றை இச்சிகிச்சைக்கு வரும் போது உடன் எடுத்து வரும்படியும் -

பிரதிப்பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஓ)

## வலி. தென்மேற்கு மற்றும் மேற்கில் கட்டாக்காலி நாய்கள் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம்,மே1

வலி.தென்மேற்கு மற்றும் வலி. மேற்குப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த வாரம் சங்கானையில் கட்டாக்காலி விசர் நாய்கள் ஐந்தும் நவாலியில் கட்டாக்காலி விசர் நாய்கள் நான்கும் மானிப்பாய் சந்தைக்கு அருகில் கட்டாக்காலி விசர்நாய்கள் மூன்றும் பொதுமக்களால் அடித்துக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

கட்டாக்காலி நாய்களை நஞ்சூட்டி அழிப்பதற்கான மருந்துகள் கடந்த 3 மாதங்களாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வழங்கப்படவில்லையென கூறப்படுகிறது.

இனிவரும் காலங்களில் பயிற்றப்பட்ட தொழிலாளரைக் கொண்டு வண்டில்களில் நாய்களைப் பிடித்துச் சென்று அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

கொழும்பில் நவீன தொழில்நுட்பத்தின் கீழ் 'விஷவாயு' பயன்படுத்தி கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஓ-185)

## அமெரிக்காவின் வயது 200 வருடங்கள் மட்டுமே

# நெடிய வரலாற்றைக் கொண்ட தமிழினத்துக்கு அமெ.தூதர் உபதேசிப்பது துரதிர்ஷ்டவசமானது!

## அல்ஸி வில்ஸுக்கு தேவதாசன் அனுப்பிய காட்டமான கடிதம்

யாழ்ப்பாணம்,மே.1

நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட தமிழினத்துக்கு 200 வயதைக்கொண்ட அமெரிக்காவின் வந்தேறு குடிகள் சுயநிர்ணய உரிமை பற்றி உபதேசிக்க முற்படுவது துரதிர்ஷ்டவசமானது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் அலஸி வில்ஸுக்கு தான் எழுதிய கடிதத்தில் ஐக்கிய சோஷலிசக் கட்சியின் யாழ்மாவட்ட அமைப்பாளர் க.தேவதாசன் குறிப்பிட்டுள்ளார்.

சமாதானப் பேச்சில் கலந்துகொள்வதை இடைநிறுத்துவது என விடுதலைப் புலிகள் தீர்மானித்திருப்பது குறித்து அமெரிக்கத் தூதர் சில நாளகளுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்திருந்தார். அக்கருத்துகள் தொடர்பாகவே அமெரிக்கத் தூதருக்கு க.தேவதாசன் மேற்படி கடிதத்தை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அறிவுரை யார் சொன்னாலும் அது ஹிட்லராயிருந்தாலுங்கூட நாம் அதை உள்வாங்கத்தான் வேண்டும். ஆனால், அதற்கு முன் அறிவுரை கூறுபவர் அதற்கான அடிப்படை உண்மையை உணர்ந்துகொள்ள வேண்டும். இது தங்களுக்கும் பொருந்தும்.

மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட தமிழீழ தேசத்தின் பூர்வீகப் பிரஜைகள் நாங்கள். 200 வருட வயதை மட்டுமே கொண்ட அமெரிக்கத் தேசத்தின் வந்தேறு குடிகள் நீங்கள். தேசத்தின் இறைமை, தேசியத்தின் சுயநிர்ணய உரிமை பற்றியெல்லாம் எங்களுக்கு உபதேசிக்கும் தகைமை தங்களுக்கு உண்டென்று தாங்கள் நம்புவது துரதிர்ஷ்டவசமானது. இதனால் வெளிப்படுவது தங்கள் தேசத்தின் உலகாளும் விருப்பம் மட்டுமே. அது உங்களின் அழகிய கனவாக இருந்துவிட்டுப் போகட்டும்.

இலங்கைத்தீவை ஐரோப்பியர் அடக்கியாண்ட காலத்தை ஒரு தடவை நினைவுபடுத்துங்கள். வெள்ளை ஆதிக்கத்தை எதிர்த்தெழுந்த 'வீரப்புரன் அப்பு' போன்ற ஸ்ரீலங்கா தேசத்தின் சிங்களத் தேசியத் தலைவர்களும் போராளிகளும் பயங்கரவாதிகளாக இனங்காணப்பட்டனர். சிங்களத் தேசிய விடுதலைப் போராட்டம் பயங்கரவாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அநீதியும் அநியாயமும் ஆட்சி செய்யும்பொழுது நீதிக்கும் நியாயத்துக்கும் பெயர் பயங்கரவாதமா? அடக்குமுறையாளருடன் சமாதான சகவாழ்வுக்கு உடன்பட்டால் அதற்குப் பெயர்தான் ஜனநாயகமா? இதற்கு உங்கள் பதில் என்ன?

இன்று ஸ்ரீலங்காவின் சிங்கள ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறத் தமிழீழ தேசம் போராடிக்கொண்டிருக்கிறது. அஹிம்சைப் போராட்டத்தை அடக்கிய சிங்கள அரசு ஆயுதப் போராட்டத்தால் அடங்கியது. இலங்கைத் தீவில் இன்று தமிழ்த் தேசியம் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது என்றால் அது ஸ்ரீலங்கா அரசினால் அல்ல; தமிழீழ விடுதலைப் புலிகளின இராணுவ பலத்தினால் மட்டுமே? தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் களைவு என்பது தமிழ்த் தேசியத்தின் மரணத்துக்குச் சமானம். தங்கள் அறிவுரையில் இவ்வுண்மை மறுக்கப்படுகின்றது. அல்லது மறைக்கப்படுகின்றது. இது ஏன்?

ஸ்ரீலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்றுவந்த பேச்சு இன்று இடைநிறுத்தப்பட்டதற்கு அமெரிக்க நிலைப்பாடும் ஒரு காரணம் வாஷிங்ரன் கூட்டத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் ஏன் அழைக்கப்படவில்லை? அமெரிக்க தேசம் தமிழீழ விடுதலைப் புலிகளை ஏன் தடைசெய்ய வேண்டும்? அமெரிக்க மண்ணிலோ, அதற்கு வெளியிலோ அமெரிக்காவுக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் போர் புரிந்திருக்கிறார்களா? அல்லது ஒரு சிறு தாக்குதலையாவது தொடுத்திருக்கின்றார்களா? அதுமட்டுமல்லாமல், ஸ்ரீலங்கா அரசே தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதித்திருந்த தடையை நீக்கிவிட பின்னரும் அமெரிக்கா இத்தடையைத் தொடர்வதில் ஏதாவது அர்த்தம் உண்டா? இதற்கு உங்கள் பதில் என்ன?

"அமெரிக்க நிலைப்பாட்டை நியாயப்படுத்துவோர் ஜனநாயகவாதிகள்; நிராகரிப்போர் பயங்கரவாதிகள்" என்ற 'அமெரிக்க அகராதி' ஒருபொழுதும் உலகத்தின் அகராதியாகிவிட முடியாது. இலங்கைத் தீவின் இனவிவகார வரலாற்றை அறியுங்கள்; ஆராயுங்கள். அதன்பின் அறிவுரை கூறுங்கள். அதுவே நல்லது. தமிழீழ தேசத்தின் விடுதலைக்கு முடிந்தால் உதவுங்கள். அன்றேல் குறுக்கே நிற்காதீர்கள்!

- என்றுள்ளது.

### பெந்தகொஸ்தேயின் புதிய கட்டட திறப்பு

யாழ்ப்பாணம்,மே1

இலங்கை பெந்தெகொஸ்தே சபையின் புதிய கட்டட திறப்பு ஆராதனை இன்று காலை 9 மணிக்கு யாழ். கச்சேரியடியில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 4 ஆம் திகதிவரை தினமும் மாலை 4 மணிக்கு சுவிஷேச ஆராதனை இடம்பெறும். (எ)

### பெறுமதி வாய்ந்த முத்திரைகள் யாழ்.வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,மே1

யாழ்பிரதம தபாலகத்திற்கு நேற்று பெறுமதிவாய்ந்த முத்திரைகள் எடுத்து வரப்பட்டுள்ளன என்றும் -

இன்றுமுதல் அவற்றைப் பெற்றுக கொள்ள முடியும் என்றும் - பிரதம தபாலதிபர் அறிவித்துள்ளார். (எ-12)

### கூட்டுறவாளர் உரிமைகளைப்பெற மே தினத்தில் அணிதிரள்வோம்

#### சமாசத் தலைவர் கனகலிங்கம் அழைப்பு

உலக தொழிலாளர் தம் உரிமைகளை வென்றெடுத்த மே தினத்தில் ஸ்ரீ லங்கா அரசினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட தமிழ் இன ஒடுக்குமுறையை எம் இன எழுச்சியால் உலகிற்கு உணர்த்த, தமிழ்த் தேசிய இனத்தின் கூட்டு மேதினக்குழு ஏற்பாடு செய்துள்ள மேதினப் பேரணியிலும் பொதுக்கூட்டத்திலும் கூட்டுறவாளர்களும், கூட்டுறவுப் பணியாளர்களும் கலந்துகொண்டு கூட்டுறவு இயக்கத்தின் எழுச்சியை பறைசாற்ற வேண்டுமென யாழ்மாவட்ட விவசாய, நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் ப.கனகலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக சமாசம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்த் தேசியம், சுயநிர்ணயம், தன்னாட்சி உரிமை ஆகியன தமிழர்களின் அடிப்படை உரிமைகள். இதனைத் தமிழ்பேசும் மக்கள் ஒரு போதும் விட்டுக்கொடுக்கமாட்டார்கள். எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா அரசு இவ் உண்மை நிலையினை உணர்ந்து தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றி வைக்கவேண்டும். அதுவே தமிழ்பேசும் மக்களது பெருவிருப்பமாகும்.

அதேவேளை, கடந்த காலங்களில் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் கூட்டுறவாளர்களே. பல மில்லியன் ரூபா கூட்டுறவுச் சங்கங்களுக்கு இழப்பு ஏற்பட்டது. ஆனால், இதுவரை அரசிடமிருந்து எவ்வித இழப்பீடும் கிடைக்கவில்லை. கூட்டுறவுப் பணியாளர்களின் உழைப்பிற்கேற்ற ஊதியமோ, ஊக்குவிப்போ கிடைப்பதில்லை.

எதிர்காலத்தில் கூட்டுறவுப் பணியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால் அது மோசமான பின் விளைவுகளை ஏற்படுத்தும். கூட்டுறவாளர்களும், கூட்டுறவுப் பணியாளர்களும் யுத்த சூழ்நிலையில் மக்களுக்காக கடுமையாக உழைத்தவர்கள் என்பதை இம் மேதினத்தில் பெருமையோடு சுட்டிக் காட்ட விரும்புகின்றோம் - என்று அதில் உள்ளது. (எ)

விபேட்டி அச்சுவேலி
மக்கள் திலகம் M.G.R நடிக்க
இரகசிய பொலிஸ் 115
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
T.P.: 070 212223
திங்கட்கிழமை முதல் வசீகரா

நிறைஞ்சனாஸ்
விஜய், ரம்பா, ரகுவரன் நடிக்க
என்றென்றும் காதல்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.00 (பு.நே.)
China Strike Force

ராஜா யாழ்ப்பாணம்
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன், ரோஜா
அரசு
10.30, 2.30, 6.30
CROUCHING TIGER HIDDEN DRAGON
இன்றும் இரவு 9.30 இக்கு மட்டும்.

### முக்கிய அறிவித்தல்

அக்கடமி ஒவ் ஒறியன்டல் மாஷல் ஆட்ஸ்

**ACADEMY OF ORIENTAL MARTIAL ARTS**

மேற்படி கழகத்தின் முக்கியதும், அவசரமானதுமான கலந்துரையாடலும், பயிற்சிப் பாசறையும் நடைபெறவிருப்பதால் கழகத்தின் சகல மாணவர்களையும் (கறுப்புப்பட்டி உட்பட) எதிர்வரும் ஞாயிறு மாலை 4 மணிக்கு (04.05.2003) கழகத்தில் ஆசிரியரை சந்திக்கும்படி வேண்டப்படுகிறீர்கள்.

நிர்வாகம்,
A.O.M.A.
இல.9, மருதடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(சி-27653)

வேலையாள் தேவை
இலத்திரனியல் பொருள்கள் விற்பனை செய்யும் எமது நிறுவனத்திற்கு
★கணக்காளர் ஒருவரும்
★விற்பனையாளர் ஒருவரும தேவை.
நேரில் உடன் தொடர்பு கொள்ளவும்
செல்வம் எம்ரோர்ஸ்
330, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-27644)

### துயர் பகிர்கின்றோம்



மலர்வு :01.06.1973
உதிர்வு :29.04.2003

கொக்குவில் கிழக்கு காளிகோயிலடியைச் சேர்ந்தவரும் சில காலம் நீர்கொழும்பில் வசித்தவரும் தற்போது 29.04.2003 இல் ஜேர்மனியில் அகாலமரணமானவருமான

**இராசரத்தினம் வரதராஜன்**

அவர்களது மறைவு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

**அன்பின் ஆழத்தில் உறவை வளர்த்த வரதராஜனே!**
**உன்னுடைய பிரிவு எமது உள்ளத்தை நெருடுகின்றது!**
**ஆறாத சோகத்தினால் சிறகிழந்த பறவைகளாக,**
**தளபதியையிழந்த படைகளாகத் தவியாய்த் தவிக்கின்றோம்.**

அன்னாரது பிரிவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தவர்களான -

*சகோதரர்கள்:*
வசந்தராஜன் (டென்மார்க்)
மோகனராஜா (ஜேர்மனி)
உதயஷாந்தி
சுகந்தி (ஜேர்மனி)
ஜெயந்தி (ஜேர்மனி)
தமயந்தி (லண்டன்)

*மைத்துனர்மார்:*
விஜயகுமார் (இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)
இளங்கேசன் (ஜேர்மனி)
கோவிந்தராஜா (ஜேர்மனி)
குணசேகர் (லண்டன்)

*மைத்துனிமார்:*
பாமினி (டென்மார்க்)
சபிதா (ஜேர்மனி)

*பெறாமக்கள்:*
சுபாங்கி (டென்மார்க்)
வியாசன் (டென்மார்க்)
விதுரன் (டென்மார்க்)
விஸ்வா (டென்மார்க்)

*மருமக்கள்:*
சாரங்கா (ஜேர்மனி)
சுருதி (ஜேர்மனி)
வியாஷகி (ஜேர்மனி)
வாரகி (ஜேர்மனி)
சந்தியா (லண்டன்)

*காளிகோயிலடி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

(17410)

## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் தில்லைநாதர்

சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் தில்லைநாதர் அவர்கள் நேற்று (30.04.2003) புதன்கிழமை மாலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும் இரத்தினம் (நவிண்டில்) அவர்களின் அன்புக் கணவரும் புஸ்பராணி (சுவிஸ்), கெங்காதேவி, செந்திநாதன் (இலங்கை வங்கி, யாழ்.மேற்தரக்கிளை), தெய்வநாயகி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலகிருஸ்ணன் (சுவிஸ்), சிற்றம்பலம், கலாவதி (யாழ்.பல்கலைக்கழகம்), சிவராமலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் இராகுலன், பாலாம்பிகை, நர்த்தனன், மாதங்கி, கோசல்யா, சுகல்யா, சுதன், காஞ்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2003) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குடும்ப மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி தெற்கு,*
*நீர்வேலி.*

(17423)

தகவல்:
சேந்திநாதன் (மகன்)

### சுப்பையா திருநீலகண்டம்

வேலணை கிழக்கு, மணியகாரன் வீட்டடியைச் சேர்ந்த சுப்பையா திருநீலகண்டம் அவர்கள் கடந்த 29.04.2003 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பாக்கியலெட்சுமியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுப்பையா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம், தங்கரெத்தினம், புனிதவதி, இலட்சுமி, மனோன்மணி மற்றும் திலகவதி, நாகரெத்தினம், யோகவதி (ஆசிரியை), இராசலிங்கம் (ஓய்வுபெற்ற A.I.), சுந்தரலிங்கம் (R.D.O. வேலணை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாங்கரன், மனோகரன், ஜெகதீஸ்வரன், லோகேஸ்வரன், விக்னேஸ்வரன், இலட்சுமிதேவி, குகனேஸ்வரி, கலையரசி ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராணி, தர்மராணி, கலாநிதி, தவராஜா, சதானந்தயோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பானு, பாமினி, பிரசன்னா, திருஜா, திவானி, திவானா, நிதுபன், ஜென்சி, ஜெனா, ஜெனுஜா, சயந்தினி, துஸ்யந்தினி, அயந்தினி, சிந்துஜன், திருஜன், தேனுகா, அபினயா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2003) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் வேலணையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை சாட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேலணை.*

(17422)

தகவல்:
சு.சுந்தரலிங்கம்.
(R.D.O.வேலணை.)

# கொழும்பில் நடைபெறும் மேதினக் கூட்டம் - ஊர்வலம்

உலக தொழிலாளர்களின் தினமான மேதினம் இன்று இலங்கையில் அரசியல் கட்சிகளினாலும் தொழிற் சங்கங்களினாலும் கொண்டாடப்படுகின்றது.

கொழும்பிலும் மலைபகத்திலும் வடக்கு - கிழக்கிலும் மேதின ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் இன்று நடைபெறும்.

ஐ.தே.கட்சி, ஊர்வலத்தையோ, பொதுக்கூட்டத்தையோ நடத்தவில்லை. அதற்குப் பதிலாக கொழும்பு மாநகர சபை சுற்றாடலில் வர்த்தகக் கண்காட்சி, கலை நிகழ்ச்சிகள், திரைப் படக்காட்சி, இசை நிகழ்ச்சி என்பவற்றை இன்று முழுநாளும் ஒழுங்கு செய்துள்ளது. காலை 10 மணிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிகழ்ச்சிகளை ஆரம்பித்துவைப்பார்.

அரசியல் கட்சிகளின் ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் நடைபெறும் இடங்கள் வருமாறு:-

பொ.ஐ.மு.:- ஊர்வலம் - கோட்டே சந்திரா சில்வா மைதானம், கூட்டம் - பொறளை கெம்பல் பூங்கா.

ஜே.வி.பி.:- ஊர்வலம்:- தெஹிவளை எஸ்.டி.எஸ். ஜயசிங்க மைதானம், கூட்டம் - ஹெவ்லொக் டவுன் பீ.ஆர்.சி.மைதானம்.

இ.தொ.கா.:- ஊர்வலம் - காலை 9மணிக்கு நுவரெலியா பீற்று சந்தி, கூட்டம் - கவிதா கொம்பலக்ஸ் திடல்.

## கோட்டைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனுக்கு கடிதம் மூலம் அறிவித்தார். யாழ்.கோட்டைப் பகுதிக்கு படை முகாம் மாற்றப்படுவது புலிகளைத் திருப்திப்படுத்துமா அந்த முடிவை அவர்கள் வரவேற்பார்களா என்பது இன்னும் தெரியவரவில்லை.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இவ்விவகாரம் குறித்து தலைவர் வே.பிரபாகரனுடன் கலந்துரையாடிய பின்னர் புலிகளின் முடிவை அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த முடிவு இன்னும் ஓரிரு தினங்களில் வெளியாகக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொலீஸ் நிலையக் காணி மற்றும் யாழ்.கோட்டை போன்றவற்றுக்கு வெளியில் உள்ள காணிகளை - முற்றவெளி, பண்ணை போன்ற பொதுப் பிரதேசங்களை - படைத்தளம் என்ற பெயரில் படையினர் ஆக்கிரமித்திருப்பதை புலிகள் கடுமையாக எதிர்க்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ)

## அரசு - புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்ததாவது:-

முதல் கடிதம் அன்ரன் பாலசிங்கத்திற்கான பிரதமரின் பதில் நேற்று முன்தினம் இரவு அனுப்பப்பட்டது. அதன் பிரதி புலிகளின் தலைமையகத்துக்கு நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்றீசனால் கிளிநொச்சிக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இரண்டாவது கடிதம் - வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனரமைப்பு, மீள்குடியேற்றம் தொடர்பானது. அக்கடிதம் பேர்னட் குணதிலகவினால் தமிழ்செல்வனுக்கு எழுதப்பட்டுள்ளது.

மூன்றாவது கடிதம் - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவினால் பாதுகாப்பு நடவடிக்கைகள்தொடர்பாக தமிழ்ச்செல்வனுக்கு எழுதப்பட்டிருக்கின்றது.

இந்த மூன்று கடிதங்களும் கடந்த 72 மணிநேரத்துக்குள் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான உறவில் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளன. இரு தரப்பினருக்கும் இடையிலான முட்டுக்கட்டை நீக்கப்பட்டுள்ளது.

மேலும், நோர்வே அரசின் பிரதிநிதிகள் லண்டனில் அன்ரன் பாலசிங்கத்துடன் தொடர்ச்சியாகப் பேச்சுக்களை நடத்துகின்றனர். இன்னும் சில தினங்களில் நன்மையான முடிவு ஏற்படும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

ஜப்பானிய அரசின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூஷி அகாஷி, நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸென் ஆகியோர் இவ்வாரத்தில் இங்கு வருகின்றனர். இவர்கள் பிரதமர் உட்பட அரசின் சமாதானப் பேச்சுப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவார்கள். அதன் பின் கிளிநொச்சிக்குச் சென்று தமிழ்ச்செல்வனுடனும் பேசுவார்கள்.

இன்றைய நிலைவரங்கள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிடுவார். கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் பின் இந்த அறிக்கை தொடர்பான விவாதம் நடத்தப்படும். எனினும், திகதி நிர்ணயிக்கப்படவில்லை.

சமாதானப் பேச்சுக்கள் இடைநடுவில நடைப்படுவது சகஜம். ஆனால், இவ்வளவு விரைவில் மீண்டும் புரிந்துணர்வு ஏற்படுவது ஒரு பெரிய சாதனை. இதில் இரு தரப்பினருக்குமே பங்குண்டு.

- இவ்வாறு அவர் சொன்னார். (ஐ)

## மனைவியைத் தாக்கிய நபருக்கு 6மாத கடூழிய சிறைத்தண்டனை

யாழ்ப்பாணம்,மே1

தனது மனைவிக்கும், மகளுக்கும் அடித்தும், கடித்தும் காயப்படுத்திய குற்றச்சாட்டின்பேரில் ஒருவருக்கு யாழ்.நீதிமன்றினால் 6 மாத கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.அழுக்கர் வீதியைச் சேர்ந்த செல்வரத்தினம் நாகேஸ்வரன் என்பவருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 500 ரூபா தண்டப் பணம் செலுத்துமாறும் நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

இதேபோன்று தனது மனைவியை அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் அரியாலை முள்ளி வீதியைச் சேர்ந்த சைத்தியநாதன் ரவிச்சந்திரன் என்பவருக்கும் யாழ்நீதிமன்றினால் 3மாத கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (எ-10)

## மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு உயிர்தப்பிவந்ததாகவும் - தெரியவருகிறது.

இதேவேளை, கடும் கடல் கொந்தளிப்பினால் வடமராட்சிக் கடற்றொழிலாளர்கள் பலர் தொழிலுக்குச் செல்லவில்லை. (ஐ-117)

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றர் ஹரோல்டும் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்தார்.

வடக்கு - கிழக்கு புனரமைப்புக்கு உலக வங்கி வழங்கவிருக்கும் நிதி உதவிகளைப் பயன்படுத்துவது தொடர்பாக அவர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனும் புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரனுடனும் கலந்துரையாடினார். (ஐ-8-9)

## பாலசிங்கம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டைத் தெளிவுபடுத்திப் பிரதமர் பதிலளித்துள்ளார். இப்படியான சூழலில் மீண்டும் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வது தொடர்பாக பல்வேறு மட்டத்தில் பேசப்பட்டு வருகின்றன. எனவே, புலிகளின் மதியுரைஞர் இங்கு வந்து தலைவர் பிரபாகரனுடன் ஆலோசனை நடத்துகிறார் என்றால் அது பெரும் நன்மை அளிக்கும் என்று அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இந்தியா பங்குபற்றுமா? சமாதானப் பேச்சுக்களில் அது நேரடியாகப் பங்குகொள்ளுமா என நிருபர் ஒருவர் கேட்டார்.

இந்தியா எமது நாட்டின் அபிவிருத்திக்காக அந்த மண்ணில் இருந்தே எமக்குப் பாரிய உதவிகளைச் செய்து வருகின்றது. எனினும், நேரடியாகப் பங்குகொள்ளாது. இந்த விடயத்தில் இந்திய அரசுக்குக் கொள்கை ரீதியாக உள்ள சிரமங்களை நாம் அறிவோம் என அமைச்சர் பதில் அளித்தார். (ஐ)

# நகுலேஸ்வரத்தில் இந்திய சிற்பிகள்

சண்டிலிப்பாய்,மே1

தமிழகத்தில் சிற்பக்கலைக்கு பிரசித்தி பெற்ற இடமான மாமல்புரத்திலிருந்து ஸ்தபதி சி.ஞானமூர்த்தி தலைமையில் சிற்பக்கலைஞர்கள் குழு ஒன்று கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் சிற்ப வேலைகளை மேற்கொள்வதற்காக இங்குவந்துள்ளது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களின் போது சரித்திர பிரசித்திபெற்ற இந்த ஆலயம் பலத்த சேதம் அடைந்தது. சுமார் 50 லட்சம் ரூபா செலவில் இந்த ஆலயம் தற்போது புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது. ஏழு தளங்களைக்கொண்ட இராஜகோபுரம் ஒன்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை - இவ்வாலயத்தில் புதிதாக பிரதிஷ்டை செய்வதற்காக தெய்வ விக்கிரகங்கள் சில தமிழகத்திலுள்ள மாமல்லபுரத்தில் அரச சிற்பக்கலைக் கூடத்தில் உருவாக்கப்பட்டு இங்கு கொண்டுவரப்பட்டுள்ளன. மேலும் ஒரு தொகுதி விக்கிரகங்கள் தற்போது அங்கு உருவாக்கப்பட்டு வருவதாகவும்-

விரைவில் இவை இங்கு கொண்டு வரப்படவிருப்பதாகவும்-

ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

மாமல்லபுரத்திலிருந்து சிற்ப வேலைகளை மேற்கொள்வதற்காக வருகைதந்துள்ள சிற்பக் கலைஞர்கள் இருமாத காலம் வரை இங்கு தங்கியிருந்து சிற்ப வேலைகளை மேற்கொள்வார்கள் என்று தெரிவருகிறது. (ஒ-135)

## யுத்தத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுக் கூட்டத்திலும் யுத்தத்துக்கு எதிரான சுலோகங்களே பிரதானமான கோஷங்களாக இருக்கும்.

சமாதான முயற்சிகள் மீது தமிழர்கள் கொண்டுள்ள பற்றினையும் நம்பிக்கையையும் சர்வதேசத்துக்கு எடுத்துரைக்கும் நிகழ்வாக இன்றைய நிகழ்வு அமையும்.

மேதினப் பேரணியிலும் பொதுக் கூட்டத்திலும் அணிதிரண்டு வந்து கலந்துகொள்ளுமாறு அரசியல் கட்சிகளும், பொது அமைப்புகளும் வேண்டுகோள் விடுத்து அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றன.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ் அணி), ரெலோ, ஐக்கிய சோசலிசக் கட்சி, புதிய ஜனநாயகக் கட்சி, யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம், யாழ். மாவட்ட சி.க.உ.கூ. சங்கங்களின் சமாசம், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகியன மேதின நிகழ்வுகளில் மக்களைப் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்திருக்கின்றன.

இன்றைய நிகழ்வுகளில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஊர்திப் பேரணியில் கலந்து கொள்ளவரும் பொதுமக்களுக்கு விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்படவுள்ளன.

பொதுக் கூட்டத்தை தொடர்ந்து மாலையில் இசை நிகழ்ச்சி இடம்பெறும்.

(ஐ-4-10-30-15-173-17)

## மனநலம் குன்றிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்ட பெண்ணின் உறவினர்கள் விடுதலைப் புலிகளிடம் முறைப்பாடு செய்ததையடுத்து, பொதுமக்களின் உதவியுடன் அவர்கள் இருவரும் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

பிரஸ்தாப யுவதியை வான் ஒன்றில் கடத்திச் சென்ற இவர்கள் அவருடன் வல்லுறவு புரிந்துவிட்டு அவர் அணிந்திருந்த தங்கக் காப்புகளை அபகரித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி இச்சம்பவம் பற்றி தெரிவித்திருப்பதாவது:-

குடாநாட்டில் இவ்வாறான சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துவருகின்றன.

இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் எம்மிடம் வலியுறுத்தி வந்துள்ளனர். சில தீய சக்திகளின் தூண்டுதலின் பேரில் அதிகரித்துள்ள இப்படியான சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது பொதுமக்களினதும் கடமையாகும். இதற்கு விடுதலைப் புலிகளாகிய நாங்கள் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

இந்தச் சம்பவம் குறித்து பெண்ணின் உறவினர்கள் எம்மிடம் முறைப்பாடு செய்திருந்தனர். பிரஸ்தாப நபர்கள் இருவரும் தொழில்புரியும் கடையில் உரிமையாளரிடம் சென்று இத்தகவலை நாம் தெரியப்படுத்தினோம்.

அவர் பொதுமக்களின் உதவியுடன் இருவரையும் பிடித்து எம்மிடம் ஒப்படைத்துள்ளார். இருவரும் நடந்த சம்பவங்கள் உண்மையானது என ஒப்புக்கொண்டுள்ளனர்.

- இவ்வாறு இளம்பரிதி தெரிவித்தார். (ஐ-

SUBRA (14)
சித்தன்கேணி
2005 A/L
கலை, வர்த்தக
கணித, விஞ்ஞான பிரிவு
பிரிவு - II
ஆரம்பம் :
02.05.2003
வெள்ளி மாலை 4.00
(C/27616)

புதிய வீடியோ CD வெளியீடு
வெல்டன்
புதிய போஸ்ரர்கள் விற்பனைக்குண்டு.
விஷ்ணு வீடியோ
கோண்டாவில்.
(C/27658)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
ஜெயந்த்.....சார்லி நடித்த
வெல்டன்
(பிரதிகள் உடன்பெறலாம்)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(17418)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
★ வெல்டன்
(ஒரிஜினல் ரகன்)
பிரதிகளை உடன் பெறலாம்
நிதர்ஷன் வீடியோ
மயிலங்காடு
எமது பிரதிகளை
சந்திரன் மினி - யாழ்ப்பாணம்
புனா றெக்கோடிங் சென்ரர் -
நெல்லியடியிலும்
பெற்றுக்கொள்ளலாம்.
(17420)

ISP
அறிவித்தல்
இன்று வெளியாகவிருந்த
எமது தொலைபேசி
கட்டண மாற்றம் பற்றிய
விவரம் தவிர்க்க முடியாத
காரணத்தினால்
பிற்போடப்பட்டுள்ளது
என்பதனை
வாடிக்கையாளர்களுக்கு
அறியத்தருகின்றோம்.
ISP
தூபி வீதி, வல்வெட்டி.
(17410)


மேசைத் தொலை பேசி விற்பனைக்கு உண்டு
☆ மேசைத் தொலைபேசி இணைப்புகளுடன் எந்தப் பிரதேசத்திலும் பொருத்தித் தரப்படும்.
☆ சகல வகையான கையடக்கத் தொலைபேசிகள் யாவும் திருத்தித் தரப்படும்.
☆ சகல வகையான Lock உடைத்துத் தரப்படும் (இங்கு செய்து தரப்படும்).
I.D.D. ஒரு நிமிட அழைப்பு 25/-
இரவு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.

எமது தொடர்புகளுக்கு...
✳ பவர் செலுலர்
183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(வின்சர் திரையரங்கு முன்பாக)
நியூ லலிதா முதலாம் மாடி
071 - 399220 071 - 793218
✳ பவர் செலுலர்
91 1/2, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.
எமது முகவர்கள் :-
★ M.P.நாதன்
அனலைதீவு.
★ மிதுகெம் தொலைத்தொடர்பு நிலையம்
சுன்னாகம்.
★ பவர் தொலைத்தொடர்பு நிலையம்
நெடுந்தீவு.
071 - 381192
071 - 381187
★ வேறு பிரதேசங்களில் இருந்தும் முகவர்கள் தேவைப்படுகின்றனர்.
(17414)

SUBRA (14) சித்தன்கேணி
Phy. { ஜெயம் / வர்ணன்
Chy. { அன்பு / லெஸ்லி
C.maths { பிரதீபன் / குணசிங்கம்
Bio. - கஜன்
2005
பிரிவு II
Acc. { தவா / சுபேஸ்
Eco. - ஜெயகுமார்
Com. - நந்தீஸ்
Bis.Sat. - தவசேகர்
ஆரம்பம் : 02.05.2003
(வெள்ளி) பி.ப. 4.00
Tam. - நாகதமிழிந்திரன் Log. - E.S.பவன் Cri. - ஸ்டாலின்
Hin.Cu - ஸ்ரீஸ் Dra. - கஜேஸ் Hin. - ஸ்ரீஸ்
Geo. - ஜங்கரன் Pol. - விஜி
☆ எம்முடன் இணைந்தோர் வெற்றி பெறுவர் ☆
☆ நாளைய சந்ததியின் இன்றைய தெரிவு SUBRA ☆
(C/27613)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.